## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

**இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர் (1882 – 1954)**


டி.கே. சி. (1882 – 1954)

"தமிழில் எல்லாம் உண்டு; தமிழின் கவிச் சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று; அனைத்து இயல்களையும் கற்கமுடியும்" எனச் சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர். இவர், தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டியவர். டி.கே.சி. யின் வீட்டுக் கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டில், ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடிய கூட்டம், இலக்கியத்தைப் பற்றிப்பேசியது. அவ்வமைப்பு 'வட்ட தொட்டி' என்றே பெயர்பெற்றது. டி.கே.சி இலக்கியங்களின் நயங்களைச் சொல்லச் சொல்லக் கூட்டத்திலுள்ள அனைவரும் தங்களை மறந்து இலக்கியத்தில் திளைப்பர். தமிழின் இன்மை என்பது மட்டும் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். தமிழ்க் கலைகள், தமிழ் இசை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் சுவையையும் மேன்மையையும் தனித்தன்மையையும் எடுத்துச் சொன்னார். கடிதங்களிலும் அவற்றையே வியந்து எழுதினார். அவர்தம் கடிதங்கள் இலக்கியத் தரம் கொண்டு புதிய இலக்கிய வகையாகவே கருதப்பட்டன. இதய ஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும் முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரையும் அவர்தம் இலக்கிய நுகர்வுக் கடலின் சில அலைகள் எனலாம். சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும் அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்த டி.கே.சி. ஏற்றிய இலக்கியஒளி தமிழ் அழகியலை வெளிச்சப்படுத்தியது.

### வினாக்களுக்கு விடையளிக்க.

**1. அன்று, அல்ல என்பவற்றுக்கான பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

**அன்று :**

(i) எழுவாய் அஃறிணை ஒருமையில் இருந்தால் எதிர்மறைவாக்கியம் 'அன்று' என முடியும்.

(ii) இது ஒரு பொருளை அல்லது கருத்தைக் குறிப்பிட்டு மறுத்தலாகும்.

(iii) **எடுத்துக்காட்டு :** இது மரமன்று, அது பாம்பன்று, நன்றி மறப்பது நன்றன்று.

**அல்ல :**

(i) எழுவாய் அஃறிணைப் பன்மையில் இருந்தால் எதிர்மறைவாக்கியம் 'அல்ல' என முடியும்.

(ii) இது பல பொருள்களைச் சுட்டி மறுத்தலாகும்.

(iii) எடுத்துக்காட்டு : அவை பறவைகள் அல்ல, எல்லா விளக்கும் விளக்கல்ல.

நாளெல்லாம் வினைசெய்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



## சீர்களை ஒழுங்கு செய்க

**கீழ்க்காணும் பாடலின் முதலடியைக் கவனித்து, பிற அடிகளில் உள்ள சீர்களை ஒழுங்கு செய்க**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலேஊறுகின்றதீஞ்சுவைத்தண்ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்தசு கந்தமணமலரே
மேடையிலேவீசுகின்றமெல்லியபூங்காற்றே
மென்காற்றில்விளைசுகமேசுகத்திலுறும்பயனே
ஆடையிலேஎனைமணந்தமணவாளாபொதுவில்
ஆடுகின்றஅரசேஎன் அலங்கலணிந்தருளே.

**விடை :**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
தளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கலணிந் தருளே.

## படித்துப் பார்த்துப் படைத்துக் காட்டுக

**உங்கள் பகுதி நூலகத்தில் வாசகர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டை வழங்க வருகை தரும் அறிஞர் ஒருவரைக் குறித்து அறிமுக உரை எழுதுக.**

**விடை:** **அறிஞரை அறிமுகம் செய்தல்**

வணக்கம்!

இன்று நாம் இந்தக் காலைவேளையில் குழுமியுள்ளதன் நோக்கம் அனைவரும் அறிந்ததே. நூலக உறுப்பினர் அட்டை வாங்கும் இந்நாள் வாசகர்களின் பொன்னாள். விழாவிற்கு வருகை தந்துள்ள முனைவர் அ. அறிவொளி ஐயாவை தங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

முனைவர் அ. அறிவொளி ஐயா சிறந்த தமிழறிஞர், சொற்பொழிவாளர் எழுத்தாளர். டென்மார்க் தலைநகர் கோபன் ஹேகன் பல்கலைக்கழகத்தில் மாற்று மருத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். புற்றுநோய்க்குத் தமிழ் மருத்துவத்தில் இருந்து தீர்வை முன் வைத்தவர். பூம்புகார் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர். இதுவரை 120க்கும் மேலான நூல்களைப் படைத்துள்ளார். கம்பன் கழகம் இவருக்க **'ஆய்வுரை திலகம்'** என்னும் பட்டத்தை அளித்துள்ளது. கபிலவாணர் விருதையும் பெற்றுள்ளார்.

ஐயா அவர்களை இம்மேடையில் அறிமுகம் செய்ததில் அளவில்லா ஆனந்தமடைகிறேன். இடைவிடாப் பணிக்கிடையில் எங்கள் அழைப்பினை ஏற்று இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள தங்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. ஆவணம் – Document | 2. உப்பங்கழி – Backwater |
| 3. ஒப்பந்தம் – Agreement | 4. படையெடுப்பு – Invasion |
| 5. பண்பாடு – Culture | 6. மாலுமி – Sailor |

## கற்பவை கற்றபின்

### ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

**1. உங்களது ஒரு வாரத்திய நிகழ்வுகளை நாட்குறிப்பில் பதிவு செய்க.**

ஒரு வாரத்திற்குரிய நிகழ்வுகளை **மாணவர்கள் தாங்களாகவே** நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்.

**2. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு விவரிக்கும் நிகழ்வுகளைக் காலக்கோட்டில் அமைத்துக் காட்டுக.**

**அரசியல் செய்திகள்:**

10.09.1736 – பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றார்.

1746 – பிரெஞ்சுக் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையைக் கைப்பற்றினார்.

1758 (இறுதி) – சென்னைக் கோட்டை முற்றுகையை லல்லி என்பவர் தொடங்கினார்.

**சமுதாயச் செய்திகள்:**

11.06.1739 – புதுச்சேரி பட்டணத்து வீதிகள், உப்பங்கழி இடங்களில் காலைக்கடன் கழிப்பவர்களுக்கு ஆறு பணம் தண்டம் (அபராதம்).

11.11.1737 – பிரான்சிலிருந்து புதுச்சேரிக்கு கப்பல் புறப்பட்டது.

08.05.1738 – கப்பல் புதுச்சேரியை அடைந்தது.

10.09.1736 – புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது. கனகராயர் பல்லக்கில் வைத்துக் கொண்டு வந்தார். 21 பீரங்கிகள் முழங்கின.

1739 மே திங்கள் – எட்டு மாற்றுக்குக் குறைவான வராக நாணயங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம். பிரெஞ்சு மன்னர் ஆணை.

1745, 21 ஆம் நாள் – புதுச்சேரி பெருங்காற்றில் பாதித்தது. ஒழுகரையில் கனகராயர் பெருஞ்சோறு அளித்தார்.

1745 – இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் போர் மூண்டது. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை தடைப்பட்டது.

08.06.1746 – லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன.

**இறுதிக்கால நாட்குறிப்பு:**

1760, பிப்ரவரி – புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்து கொண்டிருந்தன.

1761, ஜனவரி 11 – நாட்குறிப்பின் இறுதி.

ஆனந்தரங்கர் 06.09.1736 முதல் 11.01.1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார்.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores





## சீறாப்புராணம்

**1. நீங்கள் வாழும் நகரத்தின் வரலாற்றுச் சிறப்புகளைத் திரட்டிப் படக் கட்டுரையாக்குக.**

நான் வாழும் நகரம் செஞ்சி. இந்நகரத்தின் வரலாற்றுச் சிறப்புகளை இக்கட்டுரையில் பார்ப்போம்.

**பெயர்க்காரணம் :**

முன்பு இவ்வூர் அருவா நாட்டின் பகுதியாகவும் பல்லவர் காலத்தில் தொண்டை மண்டலத்தின் பகுதியாகவும் சோழர் காலத்தில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தின் பகுதியாகவும் விஜயநகர நாயக்கர் காலத்தில் சிங்கபுர நாட்டின் ஒரு பகுதியாகவும் விளங்கியது. ஐரோப்பியர் காலத்தில் செஞ்சே என அழைக்கப்பட்டு பின்பு இப்பெயர் மருவி இன்று செஞ்சி என்ற பெயர் பெற்றுள்ளது.

**வேறு பல காரணங்கள்:**

இராமாயணக் காலத்தில் அனுமன் செஞ்சி வந்து சஞ்சீவி எடுத்து வந்ததாகவும் 'சஞ்சீவி மலை' திரிந்து செஞ்சி என்று ஆனதாகக் கூறுவர். ஒரு சிலர் சஞ்சீவி மலையை எடுத்துச் சென்ற போது சிதறிய ஒரு பகுதியே 'சஞ்சீவி மலை' எனப் பெயர் பெற்று திரிந்து செஞ்சி என்று ஆனதாகவும் கூறுவர். செஞ்சிக்கோட்டையில் உள்ள ஒரு கன்னித் தெய்வங்களுள் மூத்த கன்னியம்மனான செஞ்சியம்மன் பெயராலேயே செஞ்சி எனப் பெயர் பெற்றதாகவும் கூறுவர். இது போன்று பல காரணங்கள் கூறப்படுகிறது.

**செஞ்சியின் வேறு பெயர்கள் :**

கிருஷ்ணபுரம், பாதுஹாபாத், சித்தரி(சிண்டி) நஸ்ரத்கத்தா, நஸ்ரத்ங் எனப் பலர் பெயர்களையும் பெற்றுள்ளது. ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் **'ஜிஞ்சே'** என்று அழைத்தனர்.

**வரலாறு :**

ஆறு, மலை, காடு போன்ற இயற்கை வளங்கள் நிறைந்த செஞ்சிப் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திராவிடர்கள் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றாக புதைகுழிகளும் சவப்பானைகளும் இங்கு கிடைத்துள்ளன.

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் செஞ்சிப் பகுதியில் வாழ்ந்த மக்கள், ஆடு, மாடு மேய்த்தலை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்களின் தலைவனான ஆனந்தக்கோன் கி.பி. 1191 ஆம் ஆண்டு செஞ்சிக்கு அரசனான். கி.பி. 1200 இல் செஞ்சிக் கோட்டையைக் கட்டினான். இவனைத் தொடர்ந்து கிருஷ்ணக்கோன், கோனேரிக்கோன், கோவிந்தக்கோன், புலியக்கோன் என்று கோன் வம்சனத்தினர் ஆண்டனர். இவர்களைத் தொடர்ந்து **குறும்பர், சோழர், ஹொய்சாளர்கள், நாயக்கர், மராட்டியர், மொகலாயர், ஐரோப்பியர்** எனப் பலரும் ஆட்சி செய்து செஞ்சியை வளப்படுத்தியுள்ளனர்.

**செஞ்சியில் நடைபெற்ற போர்கள் :**

தலைக்கோட்டைப் போர், செஞ்சி நாயக்க மரபுகள் (செஞ்சிப்போர்), சிவாஜியின் செஞ்சி வெற்றி, வந்தவாசிப் போர், தேசூர்ப்போர், செஞ்சியில் ஹைதர் படையெடுப்பு எனப் பன்னிரண்டு போர்கள் நடைபெற்றுள்ளன.

**செஞ்சிக் கோட்டையில் அடங்கியவை :**

இராஜகிரிக் கோட்டை, கிருஷ்ணகிரிக் கோட்டை, சங்கிலித் துர்க்கம், குத்தரிசி மலை, சந்திராயன் துர்க்கம் இவ்வைந்து மலைகளையும் இணைத்து செஞ்சிக்கோட்டை என்ற பொதுப் பெயரால் அழைக்கின்றனர். இலக்கியங்கள் சுட்டும் மதிலரண், நீர் அரண், நிலவரண், காட்டரன், மலையரண் எனப் பலவகையான அரண்களையும் இக்கோட்டை கொண்டுள்ளது. இவை மட்டுமின்றி கோட்டைச் சுவர்களில் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் வைத்துச் சுடுவதற்கான பல துவாரங்களும் அறைகளும் இருந்துள்ளன. மேலும் ஆபத்தில் வெளியேற சுரங்க வழிகளும் இருந்ததாகக் கூறுகின்றனர். இத்துணை சிறப்புமிக்க இவ்விடத்தை அனைவரும் கண்டு ரசிக்கலாம்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**சந்தியா :** செவிலி கூற்றானது, தலைவியது உடன்போக்கை அறிந்தபோது செவிலியானவள் நற்றாய், பாங்கி முதலியவருடன் பேசும் கூற்று.

**தாமரை :** தலைவியது உடன்போக்கை அறிந்த போது அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர், செவிலி, பாங்கன், கண்டோர் என்போருடன் பேசும் கூற்றுகள் நற்றாய் கூற்றாகும்.

**சந்தியா :** சங்க இலக்கியங்கள் சிறப்பாக உலகம் போற்றும் இலக்கியமாக இருப்பதற்கு கூற்றுமுறைகள் முக்கிய பங்கு வகிக்கிறது எனலாம்.

## பிம்பம்

**1. "இந்த உலகமே நாடகமேடை; அதில் அனைத்து ஆண்களும் பெண்களும் வெறும் நடிகர்களே. ஒவ்வொருவருக்கும் அறிமுகமும் முடிவும் உண்டு. ஒருவருக்கே பல வேடங்களும் உண்டு." - ஷேக்ஸ்பியரின் இக்கருத்தை 'பிம்பம்' சிறுகதையுடன் ஒப்பிட்டுப் பார்க்க.**

ஒவ்வொரு மனிதனும் போலியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் எல்லோரும் கண்ணாடி முன்னே நிற்கும்போதுதான் உண்மையான முகம் வெளிப்படுகிறது. வாழ்க்கை வாழ்வதற்காக இடம், பொருள் பார்த்து முகத்தை மாற்றிக் கொள்கிறோம். முகம் மாறினால்தான் வாழ்க்கையும் மாறுகிறது.

இதைத்தான் பிம்பம் சிறுகதையில் மாறாது, மாட்டேன் என்முன் முகம் காட்டும் முகங்கள் என் கண்ணாடி, எந்த முகத்தை நான் என் கண்ணாடியில் பார்க்கிறேனோ, அதைப் போலவே இருக்கும் என் முகச் சிதறல்களில் ஒன்றை எடுத்துப் போட்டுக் கொள்வேன். ஏ-க்கு ஏ-யும் இசட்டுக்கு இசட்டும்தான் என உண்மையை மட்டும் காட்டுவதுதான் என்கிறது பிம்பம்.

ஒரு மனிதன் தன்னுடைய குடும்பத்திலுள்ளவர்களில் கூட வேடமணிந்து நடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை நிலை. இதனால் முகம் மாறுகிறது. ஒவ்வொருவரும் தன்னுடைய உண்மையான முகத்தையை மறந்துவிடும் அளவிற்கு நடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை 'பிம்பம்' சிறுகதை படம் பிடித்துக் காட்டுகிறது.

'பிம்பம்' சிறுகதையும் ஷேக்ஸ்பியரின் கருத்தும் மனிதனின் உண்மை நிலையை உலகுக்கு எடுத்துரைக்கிறது. பிம்பம் சிறுகதையும் ஷேக்ஸ்பியரின் கருத்தும் ஒத்திருக்கிறது எனலாம்.

## பா இயற்றப் பழகலாம்

**1. ஆசிரிய விருத்தங்களை அசையாகவும் அசைக்குரிய வாய்பாடாகவும் வாய்பாட்டிற்குரிய தளையாகவும் எழுதுக.**

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே !
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவைப் பெறினும் வேண்டேன் !
அரங்கமா நகரு ளானே !

–தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

**ஆசிரிய விருத்தம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பச்/சை/மா | மலை/போல் | மே/னி |
| | நேர் நேர் நேர் | நிரை நேர் | நேர் நேர் |



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores





### ஆசிரிய விருத்தம்

| | | | |
|---|---|---|---|
| 1. | சீ/ரிய | நெ/ற்றி | எங்/கே? |
| | நேர் நிரை | நேர் நேர் | நேர் நேர் |
| 2. | சிவந்/தநல் | இதழ்/கள் | எங்/கே? |
| | நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| 3. | கூ/ரிய | விழி/கள் | எங்/கே? |
| | நேர் நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| 4. | குறு/நகை | போ/ன | தெங்/கே? |
| | நிரை நிரை | நேர் நேர் | நேர் நேர் |
| 5. | நே/ரிய | பார்/வை | எங்/கே? |
| | நேர் நிரை | நேர் நேர் | நேர் நேர் |
| 6. | நிமிர்ந்/தநன் | னடை/தான் | எங்/கே? |
| | நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| 7. | நில/மெலாம் | வணங்/கும் | தோ/ற்றம்! |
| | நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| 8. | நெருப்/பினில் | வீழ்ந்/த | திங்/கே! |
| | நிரை நிரை | நேர் நேர் | நேர் நேர் |

### பாடலின் அசைவுக்குரிய வாய்பாடு

| | | | |
|---|---|---|---|
| 1. | நேர் நிரை | நேர் நேர் | நேர் நேர் |
| | கூவிளம் | தேமா | தேமா |
| 2. | நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| | கருவிளம் | புளிமா | தேமா |
| 3. | நேர் நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| | கூவிளம் | புளிமா | தேமா |
| 4. | நிரை நிரை | நேர் நேர் | நேர் நேர் |
| | கருவிளம் | தேமா | தேமா |
| 5. | நேர் நிரை | நேர் நேர் | நேர் நேர் |
| | கூவிளம் | தேமா | தேமா |
| 6. | நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| | கருவிளம் | புளிமா | தேமா |
| 7. | நிரை நிரை | நிரை நேர் | நேர் நேர் |
| | கருவிளம் | புளிமா | தேமா |
| 8. | நிரை நிரை | நேர் நேர் | நேர் நேர் |
| | கருவிளம் | தேமா | தேமா |



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**சொற்பொருள் அறிக**

1. பகைமை – வெறுப்பு
2. கண்ணுரைக்கும் – கண்ணின் குறிப்புகளை
3. வகைமை உணர்வார் – குறிப்புகளை உணர்ந்துக் கொள்ளுதல்

### படைமாட்சி

**5. மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்**
**எனநான்கே ஏமம் படைக்கு.** குறள் -766

**விளக்கவுரை** : வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவர் ஆதல் ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பு.

**சொற்பொருள் அறிக**

1. மறம் – வீரம்
2. தேற்றம் – தெளிவு
3. ஏமம் – நல்கும்

### பகைத்திறம் தெளிதல்

**6. பகைஎன்னும் பண்பில் அதனை ஒருவன்**
**நகையேயும் வேண்டற்பாற்று அன்று.** குறள் -871

**விளக்கவுரை** : பகை என்னும் பண்பற்றதை ஒருவன் விளையாட்டுக்குக்கூட விரும்பக்கூடாது!

**சொற்பொருள் அறிக**

1. பண்பில் அதனை – பண்பில்லாத தீமையை
2. நகையேயும் – பொழுதுபோக்கு
3. வேண்டற்பாற்று அன்று – விரும்பக்கூடாது

**7. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**செல்லேர் உழவர் பகை.** குறள் -872

**விளக்கவுரை** : வில் வீரரின் பகையைப் பெற்றாலும், சொல்வன்மை உடைய அறிஞரின் பகையைப் பெறக்கூடாது!

**சொற்பொருள் அறிக**

1. வில்லேர் – படைக் கருவிகள்
2. செல்லேர் – சொல்லாற்றால் கருவி

**8. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து.** குறள் -879

**விளக்கவுரை** : சிறியதாக இருக்கையிலேயே முள்மரத்தைக் களைந்து விடுக! முதிர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே காயப்படுத்தும்.

**அணி** : பிறிதுமொழிதல் அணி

**சொற்பொருள் அறிக**

1. இளைதாக – சிறியதாக
2. களையுநர் – அகற்றுதல்
3. காழ்த்த இடத்து – முதிர்ந்து விடுதல்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores





**சொற்பொருள் அறிக**

1. இரந்து – யாசித்து
2. பரந்து – அலைந்து

**14. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்.** **குறள் -1068**

**விளக்கவுரை** : பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.


**அணி** : உருவக அணி

**சொற்பொருள் அறிக**

1. தோணி – மரக்கலம்
2. பக்கு – உடைந்து

## கற்பவை கற்றபின்

**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.** [அரசு மாதிரி வினா 2018]



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

**விடை: அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லேர் உழவர் பகை.**

**2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

கொடி தவித்ததைப் பாரி
அறிந்துகொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்துகொண்டான்
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

**விடை: ஆ) குறிப்பில் குறிப்புணர்வு வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.**

**3. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ________ நினை.**

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

**[விடை : இ) மறதியால் கெட்டவர்களை]**

**4. பொருள் கூறுக.**

அ) ஏமம் – பாதுகாப்பு

ஆ) மருந்துழைச் செல்வான் – மருந்தாளுநர்.

**5. இலக்கணக்குறிப்பு தருக.**

அ) கெடுக – வியங்கோள் வினைமுற்று

ஆ) குறிப்புணர்வார் – வினையாலணையும் பெயர்

## குறுவினா

**1. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?**

நோய் நிலை உணர்ந்து மருத்துவர் சொற்படி நடக்கும் **நோயாளி** அனுபவமும், மதிநுட்பமும் வாய்ந்த மருத்துவ அறிவுள்ள **மருத்துவன்,** உடற்கூற்றுக்குப் பொருந்திய, ஊறுவிளைவிக்காத **மருந்து.** மருத்துவனின் குறிப்புணர்ந்து செயல்படும் **உதவியாளர்** என்று நான்கு திறம் வாய்ந்ததே நோயை நீக்கும் நெறி.

**2. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?**

வீரம், தன்மான உணர்வு, திறமையாகப் போரிடும் நெறிமுறை, பகைவரின் வலிமையை நன்கு தெளிந்து இருத்தல் ஆகிய நான்கும் படைக்குப் பாதுகாப்பாகும்.

**3. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிட வேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.**

களைய வேண்டிய முள்மரம், முற்றி காழ்ப்பேறிவிட்டால், அது களைபவர் கையை வருத்தும். ஆகையால் அது இளஞ்செடியாக இருக்கும் பொழுதே கிள்ளி எறிக. பகையை ஆரம்பத்திலேயே ஒடுக்க வேண்டும். பனங்காயையும், பகையாளியையும் பதம் பார்த்து வெட்டு – இது பழமொழி ஆகும்.

**4. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?** [அரையாண்டு தேர்வு 2018]

முன் உண்ட உணவு நன்றாகச் செரித்ததை அறிந்துபின், ஏற்ற உணவை அளவோடு உண்டால் உடலுக்கு மருந்தே தேவையில்லை.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பது திருக்குறளே :**

**பொச்சாவாமை :**

நாம் மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கும் பொழுது, இதற்கு முன் சிற்றின்பத்தில் ஈடுபட்டு, மதி மயங்கி தம் கடமைகளை ஆற்ற மறந்து கெட்டொழிந்தவர்களை நினைவில் கொள்க. எத்தகைய மகிழ்ச்சியில் மூழ்கி இருந்தாலும், நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை மறக்கக் கூடாது. தாம் செய்து முடிக்க வேண்டிய அருஞ்செயல்களை மறவாமல் மனத்தில் இறுத்த வல்லவர்களுக்கு, செய்ய எண்ணிய அருமையான செயல்களையும் மிக எளிதில் செய்ய இயலும்.

**குறிப்பறிதல் :**

நம்மைக் காண வருபவர், எந்தக் குறிக்கோளுடன் வருகிறார் என்பதைக் குறிப்பால் அறிந்து, அதற்கு என்ன செய்யவேண்டும் என்று நாம் கருதுகிறோம் என்பதையும் குறிப்பால் உணர்ந்து, அதற்கேற்ப செயல்படுபவனை, எந்த உயர்ந்த பொருளையும் விலையாகக் கொடுத்தும் அவனைப் பணியாளனாகக் கொள்க. பிறர்முகம் வெளிப்படுத்துவதை உணரும் ஆற்றல் படைத்த கண்களைப் பெற்றிருந்தால், அக்கண்களே நம்முன் நிற்பவன் பகைவனா அல்லது நண்பனா என்பதை நமக்குப் புலப்படுத்திவிடும்.

**படைமாட்சி :**

வீரம், தன்மான உணர்வு, திறமையாகப் போரிடும் நெறிமுறை, பகைவரின் வலிமையை நன்கு தெளிந்து இருத்தல் ஆகிய நான்கும் படைக்குப் பாதுகாப்பாகும்.

**பகைத்திறம் தெளிதல் :**

சேர்ந்து மகிழ்வாக வாழவேண்டிய மக்களைப் பிரித்துத் துன்புற்று வாழவைக்கும் பகை என்கின்ற தீய குணத்தைப் பெற்றிருப்பது விளையாட்டிற்காகக்கூட விரும்பத்தக்கது அன்று. வில்லைக் கருவியாகக் கொண்டு போரிடும் வீரனது பகையைக் கொண்டாலும் சொல்லைக் கருவியாகக் கொண்ட அறிஞர் பகையைக் கொள்ளக்கூடாது. களைய வேண்டிய முள்மரம், முற்றிக் காழ்ப்பேறிவிட்டால், அது களைபவர் கையை வருத்தும். ஆகையால் அது இளஞ்செடியாக இருக்கும் பொழுதே கிள்ளி எறிக. பகையை ஆரம்பத்திலேயே ஒடுக்க வேண்டும்.

**மருந்து :**

முன் உண்ட உணவு நன்றாகச் செரித்ததை அறிந்து பின் ஏற்ற உணவை அளவோடு உண்டால் உடலுக்கு மருந்தே தேவையில்லை. நோயின் தன்மை, நோய் வருவதற்கு உரிய காரணம் அந்நோயைப் போக்குவதற்கு உள்ள வழிமுறைகள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்ப மருத்துவம் செய்ய வேண்டும்

மருத்துவன், நோயாளியின் வயதின் அளவு, மருந்தை ஏற்றுக்கொள்ளும் உடல் தன்மை, பீடிக்கப்பட்ட நோயின் அளவு, நோயுற்றிருக்கும் காலநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மருத்துவம் செய்ய வேண்டும்.

நோய் நிலையுணர்ந்து மருத்துவர் சொற்படி நடக்கும் நோயாளி அனுபவமும், மதிநுட்பமும் வாய்ந்த மருத்துவ அறிவுள்ள மருத்துவன், உடற்கூற்றுக்குப் பொருந்திய, ஊறுவிளைவிக்காத மருந்து, மருத்துவனின் குறிப்புணர்ந்து செயற்படும் உதவியாளர் என்று நான்கு திறம் வாய்ந்ததே நோயை நீக்கும் நெறி.

**இரவச்சம் :**

உழைத்து வாழ முயலாமல், சோம்பேறியாய் இரந்து வாழவேண்டும் என்பது இறைவனின் திருவுளம் அன்று. இரந்துண்டு உயிர்வாழ்பவன் மானமற்றவன், மானமற்ற அவ்விழிபிறப்பைப் படைத்தது இறைவனே ஆயினும் குற்றம் குற்றமே! பிச்சையெடுப்பதே வருத்தத்தைத் தரும் செயல். வேறு வழியின்றி பிச்சையெடுக்கும் பொழுது, ஏற்பவர் நிலையறிந்தும், வைத்துக்கொண்டே இல்லையென்று கூறும், கல்நெஞ்சரைக் காணின் பிச்சையெடுப்பவர் உள்ளமே உடைந்துவிடும்.

**முடிவுரை :** வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக கருதும் குறட்பாக்கள் சிலவற்றை இங்கு கண்டோம்.

நாளெல்லாம் வினைசெய்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (1 மதிப்பெண்)

**1. ஆனந்தரங்கருக்கு பொருத்தமானது எது?**

அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

[விடை: ஆ) இந்தியாவின் பெப்பிசு]

**2. முதலடியும் இறுதி அடியும் அளவடிகளாகவும் இடையடிகள் குறளடி சிந்தடியாகவும் வரும் ஆசிரியப்பா**

அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) நிலைமண்டில ஆசிரியப்பா [அரசு மாதிரி வினா 2018]

இ) இணைக்குறள் ஆசிரியப்பா ஈ) அடிமறிமண்டல ஆசிரியப்பா

[விடை: இ) இணைக்குறள் ஆசிரியப்பா]

**3. 24 பணம் என்பது ....................** [அரையாண்டு தேர்வு 2018]

அ) இரண்டு வராகன் ஆ) ஒரு வராகன்

இ) மூன்று வராகன் ஈ) நான்கு வராகன் [விடை: ஆ) ஒரு வராகன்]

**4. 'பிம்பம்' - என்ற சிறுகதையின் ஆசிரியர்** [அரையாண்டு தேர்வு 2018]

அ) புதுமைப்பித்தன் ஆ) பிரபஞ்சன்

இ) அ.முத்துலிங்கம் ஈ) ஜெயமோகன் [விடை: ஆ) பிரபஞ்சன்]

### கூடுதல் 1 மதிப்பெண் வினா விடைகள்

1. நாட்குறிப்பை ஆங்கிலத்தில் எவ்வாறு அழைப்பர்? [விடை: டைரி]
2. டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலம் எது? [விடை: குறைசி இன மக்கள்]
3. முகலாய மன்னர்களில் யாருடைய காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்தது? [விடை: பாபர்]
4. நாட்குறிப்பு எழுதும் பழக்கமுள்ள போர்ச்சுக்கீசிய மாலுமி [விடை: வாஸ்கோடகாமா]
5. ஆனந்தரங்கர் வாழ்ந்த நூற்றாண்டு எது? [விடை: 18ஆம் நூற்றாண்டு]
6. யாருடைய ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது [விடை: ஔரங்கசீப்]
7. வாஸ்கோடகாமாவின் நாட்குறிப்புகளைப் பதிவு செய்தவர் [விடை: ஆல்வர்ரோ வெல்லோ]
8. 1498இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுக்கீசிய மாலுமி [விடை: வாஸ்கோடகாமா]
9. கியோம் ஆந்த்ரே எபேரின் தகராக நியமிக்கப்பட்டவர் யார்? [விடை: நைனியப்பர்]
10. ஆனந்தரங்கர் பிறந்த ஆண்டு [விடை: 1709ஆம் ஆண்டு மார்ச் 30]
11. ஆனந்தரங்கர் பிறந்த இடம் [விடை: சென்னையிலுள்ள பெரம்பூர்]



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



38. யாப்பு என்னும் கடலைக் கடக்க உதவும் நூல் எது? [விடை: யாப்பருங்கலக்காரிகை]

39. வெண்பாவுக்குரிய ஓசை வடிவம் [விடை: செப்பலோசை]

40. ஆசிரியப்பாவுக்குரிய ஓசை வடிவம் [விடை: அகலலோசை]

41. கலிப்பாவிற்குரிய ஓசை [விடை: துள்ளலோசை]

42. வஞ்சிப்பா பெற்று வரும் ஓசை [விடை: தூங்கலோசை]

43. இரண்டு சீர்களைக் கொண்டது [விடை: குறளடி]

44. மூன்று சீர்களைக் கொண்டது [விடை: சிந்தடி]

45. நான்கு சீர்களைக் கொண்டது [விடை: அளவடி]

46. ஐந்து சீர்களுடன் வருவது [விடை: நெடிலடி]

47. அகற்பா என்றழைக்கப்படுவது [விடை: ஆசிரியப்பா]

48. சங்ககாலத் தமிழில் எப்பாக்களால் ஆன பாடல்கள் மிகுதியாக உள்ளன? [விடை: ஆசிரியப்பா]

49. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் [விடை: இயற்சீர்]

50. மாமுன் நேர் ஒன்றி வருவது எத்தளை? [விடை: நேரொன்றாசிரியத்தளை]

51. விளம்முன் நிரை ஒன்றி வருவது எத்தளை [விடை: நிரையொன்றாசிரியத்தளை]

## குறுவினா (2 மதிப்பெண்கள்)

**1. ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்களைப் பற்றிக் குறிப்பிடுக.**

| | |
|---|---|
| 480 காசு | – ஒரு ரூபாய் |
| 60 காசு | – 1 பணம் |
| 8 பணம் | – 1 ரூபாய் |
| 24 பணம் | – ஒரு வராகன் |
| 1 பொன் | – ½ வராகன் |
| 1 வராகன் | – 3 அல்லது 3.2 ரூபாய் |
| 1 மோகரி | – 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம் |
| 1 சக்கரம் | – ½ வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்கநாணயம் |

**2. ஆனந்தரங்கரை பற்றி மகாகவி பாரதியார் குறிப்பிட்ட செய்தி யாது?**

அந்தக் காலத்தில் நடந்த செய்திகளை எல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல் ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப்போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர்.

**3. ஆனந்தரங்கர் நாட்குறிப்பைக் குறித்து உ.வே.சா வின் கருத்து என்ன?**

தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.

**4. அகநானூறு - குறிப்பு வரைக.**

அகநானூறு எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. அகநானூறு 145 புலவர்கள் பாடியப் பாடல்களின் தொகுப்பு. இது களிற்றியானை நிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு ‘நெடுந்தொகை நானூறு’ என்ற பெயரும் உண்டு. இந்நூலின் தொகுப்பு முறையில் ஓர் ஒழுங்கு உண்டு. வீரைவெளியன் தித்தனார் பாடிய ஒரேயொரு பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**13. சங்க காலத்தில் தமிழில் மிகுதியாக இருந்த பாவகை எது?**

பா இயற்றுவதற்குரிய எளிய வடிவமாக ஆசிரியப்பாவைக் கூறலாம். அகவல் ஓசை பெற்றதால் ஆசிரியப்பாவை 'அகவற்பா' என்றும் கூறுவர். பெரும்பாலும் ஆசிரியப்பா இரண்டு அசைகளால் அமையும். ஆசிரியப்பாக்களால் ஆன பாடல்களே சங்க காலத் தமிழில் மிகுதியாக உள்ளன.

**14. திருக்குறளில் படைமாட்சி எனும் அதிகாரத்தில் இடம் பெறும் ஆறாவது குறட்பாவுக்கு உரிய கருத்தினை எழுதுக.**

மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

வீரம், தன்மான உணர்வு, திறமையாகப் போரிடும் நெறிமுறை, பகைவரின் வலிமையை நன்கு தெளிந்து இருத்தல் ஆகிய நான்கும் படைக்குப் பாதுகாப்பாகும்.

## சிறுவினா

**1. நாட்குறிப்பு - குறிப்பு வரைக.**

(i) நாட்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவு செய்யும் ஏடாகும். இதனை ஆங்கிலத்தில் 'டைரி' என்று அழைப்பர். டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான **டைஸ்** என்ற சொல்லில் இருந்து இச்சொல் உருவாயிற்று.

(ii) நாட்குறிப்புகளின் முன்னோடியாகச் திகழ்வது EPHEMERIDES என்று அழைக்கப்பெறும் கிரேக்கக் குறிப்பேடு ஆகும். இச்சொல் ஒரு நாளுக்கான முடிவு என்னும் பொருளைத்தரும். முகலாய மன்னர்களில் பாபர் காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

(iii) ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது. 1498 இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர்.

(iv) அவருடைய நாட்குறிப்புகள் ஆல்வாரோவெல்லோ என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**2. ஆனந்தரங்கர் 'இந்தியாவின் பெப்பிசு' என ஏன் அழைக்கப்படுகிறார்?**

(i) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் **'சாமுவேல் பெப்பிசு'** ஆவார்.

(ii) ஆங்கிலேயேக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை (1660-1669) நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார்.

(iii) இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01.1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும்.

(iv) இதனால் ஆனந்தரங்கர் **'இந்தியாவின் பெப்பிசு'** என்று அழைக்கப்படுகிறார்.

**3. ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகள் பற்றி விவரிக்க.**

(i) ஆனந்தரங்கரின் இறுதிகால நாட்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் மிக விரிவாகப் பேசியுள்ளார்.

(ii) 1760 பிப்ரவரியில் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்து கொண்டிருந்ததாகவும் செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று, ஆங்கிலத் தளபதி, புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் தகவல் வந்துள்ளது. ஆங்கிலேயப் படைகள் சாரம்வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



(iii) தேவனாம்பட்டணத்தில் மேலும் மேலும் துருப்புகளை ஆங்கிலேயக் கப்பல்கள் இறக்கின. புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். புதுச்சேரியின் இவ்வாறான சூழ்நிலையில் ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு இருந்த ஆனந்தரங்கரின் உடல்நிலை மிகவும் மோசம் அடைந்தது.

(iv) 12-01-1761 திங்கள் கிழமை ஐந்து நாழிகைக்குப் பட்டணத்தின் மீது பீரங்கிக் குண்டுகள் விழுந்து கொண்டிருந்த வேளையில் ஆனந்தரங்கர் மறைந்தார். 1736 ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவு செய்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 1761 ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது.

**4. சீறாப்புராணம் - சிறுகுறிப்பு வரைக.**

(i) இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையானதாக விளங்குவது சீறாப்புராணம். 'சீறா' என்பது சீறத் என்னும் அரபுச் சொல்லின் திரிபு ஆகும். இதற்கு வாழ்க்கை என்பது பொருள். புராணம் – வரலாறு. நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் இந்நூலை வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்க உமறுப்புலவர் இயற்றினார் என்பர்.

(iii) இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜிறத்துக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் 92 படலங்களையும் 5027 விருத்தப் பாடல்களையும் கொண்டது. நூலை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்திய காரணத்தால் பனுஅகமது மரைக்காயர் இதைப் பாடிமுடித்தார். இவர் பாடியபகுதி 'சின்னச் சீறா' என்று அழைக்கப்படுகிறது.

(iv) உமறுப்புலவர் எட்டயபுரத்தின் அரசவைப் புலவர் கடிகை முத்துப்புலவரின் மாணவர். நபிகள் நாயகத்தின் மீது 'முதுமொழி மாலை' என்ற நூலையும் இயற்றியுள்ளார். வள்ளல் சீதக்காதி, அப்துல்காசிம் மரைக்காயர் ஆகியோர் இவரை ஆதரித்தனர்.

**5. முதற்பொருளும் உரிப்பொருளும் - குறிப்பு வரைக.**

| திணை | நிலம் | பெரும் பொழுது | சிறு பொழுது | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த நிலமும் | கூதிர், முன்பனி | யாமம் | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | கார் | மாலை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | காலை | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | எற்பாடு | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த நிலமும் | இளவேனில் முதுவேனில் | நண்பகல் | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**7. சொற்பொருள் பின்வருநிலையணி பற்றி எழுதுக.** [அரையாண்டு தேர்வு 2018]

**அணி விளக்கம் :**

புலவர் தாம் இயற்றும் செய்யுளில் ஓரிடத்தில் வந்த சொல்லையே மீண்டும் மீண்டும் அதே பொருளில் வருமாறு அமைப்பது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

**அணி அமைந்த பாடல் :**

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

**இப்பாடலின் பொருள் :**

நோயின் தன்மை, நோய் வருவதற்கு உரிய காரணம் அந்நோயைப் போக்குவதற்கு உள்ள வழிமுறைகள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்ப மருத்துவம் செய்ய வேண்டும்.

**அணி பொருத்தம் :**

இக்குறட்பாவில் வள்ளுவர் 'நோய்' என்னும் சொல்லை மீண்டும் மீண்டும் 'வலி' என்னும் ஒரே பொருளைத் (நோ – வருத்தம், வியாதி, பலவீனம்) தருமாறு அமைத்திருப்பதால் இக்குறட்பா சொற்பொருள் பின்வருநிலையணிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**8. பொச்சாவாமை எனும் அதிகாரத்தில் 9 மற்றும் 10வது திருக்குறளில் இடம் பெறும் குறட்பாக்களின் விளக்கத்தினை தருக.**

இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

நாம் மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கும் பொழுது, இதற்கு முன் சிற்றின்பத்தில் ஈடுபட்டு, மதி மயங்கி தம் கடமைகளை ஆற்ற மறந்து கெட்டொழிந்தவர்களை நினைவில் கொள்க.

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

தாம் செய்து முடிக்க வேண்டிய அருஞ்செயல்களை மறவாமல் மனத்தில் இறுத்த வல்லவர்களுக்கு, செய்ய எண்ணிய அருமையான செயல்களையும் மிக எளிதில் செய்ய இயலும்.

**9. குறிப்பறிதல் எனும் அதிகாரத்தில் மூன்றாம் பாடல் மற்றும் ஒன்பதாவது பாடல் இடம் பெறும் கருத்தினை எழுதுக.**

குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

நம்மைக் காணவருபவர், எந்தக் குறிக்கோளுடன் வருகிறார் என்பதைக் குறிப்பால் அறிந்து, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் கருதுகிறோம், என்பதையும் குறிப்பால் உணர்ந்து அதற்கேற்ப செயல்படுபவனை, எந்த உயர்ந்த பொருளையும் விலையாகக் கொடுத்தும் அவனைப் பணியாளனாகக் கொள்க.

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.

பிறர்முகம் வெளிப்படுத்துவதை உணரும் ஆற்றல் படைத்த கண்களைப் பெற்றிருந்தால், அக்கண்களே நம்முன் நிற்பவன் பகைவனா அல்லது நண்பனா என்பதை நமக்குப் புலப்படுத்தி விடும்.

நாளெல்லாம் வினைசெய்

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores

# இயல் 8 யாரையும் மதித்து வாழ்

**பாடப் பகுதி**

| | |
|---|---|
| உரைநடை உலகம் | தாகூரின் கடிதங்கள் |
| கவிதைப்பேழை (செய்யுள்) | ஒவ்வொரு புல்லையும் – இன்குலாப்<br>தொலைந்து போனவர்கள் – அப்துல் ரகுமான்<br>மனோன்மணீயம் – பெ.சுந்தரனார் |
| விரிவானம் (துணைப்பாடம்) | செவ்வி – நர்த்தகி நடராஜ் |
| கற்கண்டு (இலக்கணம்) | மெய்ப்புத்திருத்தக் குறியீடுகள் |
| வாழ்வியல் | திருக்குறள் |





## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

**1. பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே ...................... என்று தமிழில் வழங்கப்படும்.**

அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு
ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
ஈ) செய்தி, வழிபாடு, பயன்பாடு

[விடை: அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு]

**2. கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு**

அ) பெயர்மரபு
ஆ) வினைமரபு
இ) ஒலிமரபு
ஈ) இவை மூன்றும்

[விடை: இ) ஒலி மரபு]

**3. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?**

அ) வாய்க்கால்
ஆ) நாங்கூழ்
இ) நடராசன்
ஈ) புல்

[விடை: இ) நடராசன்]

**4. தமிழின் முதல் பாவடிவ நாடக நூல்**

அ) இரகசியவழி
ஆ) மனோண்மணீயம்
இ) நூல்தொகை விளக்கம்
ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

[விடை: ஆ) மனோண்மணீயம்]



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores





5. **சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.**

அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

[விடை: ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்]

## குறுவினா

1. **"ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள?" - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?**

(i) எப்படிப்பட்ட தன்மையுடைய மண்ணையும் மெழுகைவிட சிறந்த சேறாகப் பதப்படுத்தி உழவுக்கும் உழவனுக்கும் உதவும் சிறந்த பண்புடைய மண்புழுவை எறும்புகளும், புழுக்களும், பூச்சிகளும் துன்புறுத்தும் செயலையே இவ்வடி குறிப்பிடுகிறது.

(ii) தன் உடம்பை உழைப்புக்குப் பயன்படுத்தும் ஒழுக்கமும், பிற உயிர்கள் தன்னைத் துன்புறுத்தும்போது பொறுத்துக் கொள்ளும் பொறையும் உடையது மண்புழு.

2. **நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**

(i) நாட்டுப்புறங்களில் இருக்கும்போது எல்லாவற்றையும் விழுங்க வல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.

(ii) பட்டணத்திலே மனித சமுதாயம் தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. அங்கே மனிதனுடைய கொடூரமான தன்மை வெளிப்படுகிறது. தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவது கூட இல்லை.

3. **"நீளும் கைகளில் தோழமை தொடரும்**
**நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" - தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

(i) மோனை : நீளும் – நீளாத

(ii) எதுகை : நீளும் – நீளாத

(iii) இயைபு : தொடரும் – படரும்

(iv) முரண் : நீளும் × நீளாத.

4. **பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் - நிறுத்தக் குறியிடுக.**

'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16–ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

## சிறுவினா

1. **இன்குலாப் "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.**

ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன் என்று கூறுகின்ற இன்குலாப் பறவைகளோடு நாடுகளின் எல்லை கடப்பேன் என்றும், பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் தனக்குத் தெரிந்த



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**இயற்கை** : விடுமுறையா? அப்படி ஒரு சொல்லே என்னைப் போன்ற இயற்கைக்கு இல்லை. என்னை விதையாக நட்டுவிட்டுத் தண்ணீர் ஊற்றுவதுடன் உன் வேலை முடிந்தது. அதன்பிறகு மண்ணில் எதிர்நீச்சல் போட்டு தளிர்விட்டு செடியாக வளர்ந்து பூ, காய், கனி கொடுக்கும் வரை எங்களுக்கு ஓய்வென்பதே இல்லை.

**மாணவன்** : உனக்கெல்லாம் உறக்கமே இல்லையா?

**இயற்கை** : என்னைப் போன்ற இறைவனால் உருவாக்கப்பட்ட எவருக்கும் ஓய்வே இல்லை. நீங்கள் கடிகாரத்தைப் பார்த்துப் பார்த்து வேலை செய்வீர்கள். ஓய்வெடுப்பீர்கள். நாங்கள் சூரியன் எவ்வாறு இயங்குகிறதோ? அதே போன்று இயங்கிக் கொண்டே இருப்போம். சூரியன் உதிப்பது ஒருநாளும் நின்றதில்லை. அதேநிலைதான் எங்களுக்கும்.

**மாணவன்** : உன்னைப் போல் எங்களால் ஓயாமல் வேலை செய்ய இயலாது. இடையிடையே ஓய்வெடுப்போம்.

**இயற்கை** : மரம், செடி, கொடிகள், பறவைகள், விலங்குகள் போன்று நாங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கிறோம். எங்களைப் போல சுயநலமற்ற உழைப்பாளி வேறு யாரும் இருக்க முடியாது. நீயும் எங்களைப் போல் சுறுசுறுப்பாக இரு. நேரம் பார்க்காமல் கடமையைச் செய். வாழ்வில் வெற்றி பெறுவாய். அனைவராலும் பாராட்டப் பெறுவாய்.

**மாணவன்** : நன்றி செடியே! இத்தனை நாள் இதைப் பற்றியெல்லாம் ஒன்றும் அறியாமல் பள்ளிக்குப் போனோமா, வந்தோமா, வீட்டுப்பாடங்களைச் செய்தோமா, சாப்பிட்டோமா, தூங்கினோமா இதுவே பெரிய வேலை என எண்ணிக் கொண்டிருந்தேன். இனிமேல் என்னை நான் மாற்றிக் கொள்கிறேன். நண்பா. தினமும் விடியற்காலையில் எழுந்து உன்னிடம் பேசி விட்டுத்தான் என் பணிகளைத் தொடர்வேன்.

**இயற்கை** : நன்றி நண்பா! நாளைப் பார்க்கலாம்.

## நெடுவினா

**1. நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.**

**நடராசன் தனிமொழிகளிலிருந்து அறியும் கருத்துகள் :**

காவல் உடைய நகரத்தின் புறத்தே நடராஜன் இன்று இரவு வேலை முடிந்து விடும் என்று எண்ணியவாறு தனித்து நின்று கொண்டிருந்தான். எச்செயலைச் செய்பவருக்கும் இலட்சியம் ஒன்று வேண்டும். உயிர்க்கு அது தூண்டுகோல் போல் அமையும். இங்கு எப்பொருளும் இலக்கு இல்லாமல் இல்லை.

இக்கரையில் முளைத்த இச்சிறு செடிகள் தமது பூக்களில் உள்ள தேனைப் பருகத் தேனீ முதலிய பூச்சிகளை வரச் செய்கின்றன. அவற்றின் மூலமாகப் பூந்தாதுக்களைக் கருப்பையில் சேர்ப்பித்துக் காய்க் காய்த்து விதையுண்டாக்கி அக்காய்களின் மேல் உள்ள சுணையினால் ஆடு, மாடு மனிதர் பறவைகள் முதலியவர்கள் மூலமாக வெவ்வேறிடங்களில் சென்று வளரச் செய்கிற தாவரங்களின் பரிவையும் பொறுமையையும் காண்போர் எவற்றையும் சிறுமையென எண்ணமாட்டார்கள். பேரழகும் ஆற்றல் சால் அன்பும் போற்றுதற்குரிய குறிப்பிற்கு ஏற்றதோர் முயற்சியையும் பார்த்துப் பார்த்துத் தம் கண் பனிப்ப, ஆர்த்தெழுகின்ற அன்பினால் அனைத்தையும் கலந்து தம் என்பெலாம் கரைத்து நல் இன்பம் அனுபவிப்பர்.

நமக்கு உணவைக் கொடுக்கும் வயலுக்கு பயன் எனப் பலர் கருதும் இச்சிறு வாய்க்கால் செய்கின்ற தொழில் எவ்வளவு விசித்திரமானது. ஆற்றில் ஓடுகிற நீர் கற்களை உடைத்துப் பொடியாக்கித் தன்னிடம் அகப்பட்ட பொருள்களை எல்லாம் மணல் கல்லுடன் அடித்துக் கொண்டு போய்க் கடலில் சேர்க்கிறது.

மீண்டும் அந்நீரே சூரிய வெப்பத்தினால் ஆவியாக மேலே சென்று மேகமாகி மழையாகப் பெய்து அருவியாகவும் ஆறாகவும் சுனையாகவும் ஊற்றாகவும் வாய்க்காலாகவும் ஓடி ஓய்வின்றி இரவுப்பகலாக உழைக்கின்றது என்னும் இயற்கையின் விசித்திரத்தைக் கூறுகின்றான்.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



# மொழியை ஆள்வோம்

## சான்றோர் சித்திரம்


திரு. வி. கலியாணசுந்தரனார் (1883 - 1953)

"பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள்; நமது நாட்டை நோக்குங்கள்; நமது நாடு நாடாயிருக்கிறதா? தாய்முகம் நோக்குங்கள்; அவள் முகத்தில் அழகு காணோம். அவள் இதயம் துடிக்கிறது. சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை உட்பகை முதலிய நோய்கள் அவளை அரிக்கின்றன; எரிக்கின்றன; இந்நோய்களால் குருதியோட்டங்குன்றிச் சவலையுற்றுக் கிடக்கிறாள். இள ஞாயிற்றொளி நோக்கி நிற்கிறாள். இளஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள்; எழுங்கள்" என்று இளமைவிருந்து நூலில் தமிழினைச் செழுமையுறச் செய்ய இளைஞர்களை அழைத்தவர் திரு.வி.க..

திரு.வி.க தம் தந்தையிடம் தொடக்கத்தில் கல்வி பயின்றார். வெஸ்லி பள்ளியில் படித்தபோது, நா.கதிரைவேலர் என்பவரிடம் தமிழ் படித்தார். பிறகு மயிலை தணிகாசலம் என்பவரிடம் தமிழோடு சைவ நூல்களையும் பயின்றார். தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படும் திரு.வி.க. பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும், காந்தியடிகளும், என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்திறவு, இந்தியாவும் விடுதலையும், பொதுமை வேட்டல், திருக்குறள் விரிவுரை முதலிய பல நூல்களை எழுதினார். சிறந்த மேடைப் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய இவர் தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு ஆசிரியராகவும் விளங்கினார்; தமிழ் அறிஞர்களுள் அரசியல் இயக்கங்களில் அதிகமான ஈடுபாடு கொண்டவராக இருந்தார். தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். இலக்கியப்பயிற்சியும் இசைப்பயிற்சியும் பெற்றவர்.

### கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி :

**1. பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள் - ஒரே தொடராக மாற்றுக.**

பொறுமையைப் பூண்டு அதன் ஆற்றலை உணர்ந்த பின் உலகை நோக்குங்கள்.

**2. எவையேனும் இரண்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுச் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.**

பூணுங்கள், உணருங்கள், நோக்குங்கள், எழுங்கள்.

**3. தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க அழைக்கப்படுகிறார்- இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.**

திரு.வி.கவை தமிழ்த்தென்றல் என்று அழைத்தனர்.

**4. ஞாயிற்றொளி - புணர்ச்சி விதி கூறுக.**

ஞாயிறு + ஒளி = ஞாயிற்றொளி

**விதி: 1** 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' எனும் விதிப்படி நிலைமொழியின் ஈற்றிலுள்ள உகரம் (று–ற்+உ) மெய்விட்டு ஓடி 'ஞாயிற் + ஒளி' என நிற்கும்.

**விதி: 2** 'நெடிலோடு உயிர்த்தொடர் குற்றுகரங்களுள் டற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே' என்னும் விதிப்படி (ற்) ஒன்று இரட்டித்து ஞாயிற் + ற் + ஒளி என நிற்கும்.

**விதி: 3** 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' எனும் விதிப்படி நிலைமொழியின் ஈற்றில் உள்ள மெய்(ற்)யும் வருமொழியின் முதல் உயிரும் (ஒ) சேர்ந்து (ற் + ஒ = றொ) ஞாயிற்றொளி எனப் புணரும்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores





| | |
|---|---|
| **கவிதை** | : எதுக்குடா சஞ்சு ஸாரி |
| **சஞ்சு** | : இன்னிக்கு உனக்கு பர்த்டேம்மா. மறந்துட்டியா? |
| **கவிதா** | : அட ஆமாம். ஜீலை பத்து. மறந்துட்டேன்டா |
| **சஞ்சு** | : அம்மா நைட்கூட ஞாபகம் இருந்தது. காலையிலே மறந்துடுச்சி ஸாரிம்மா 'ஹாப்பி பர்த்டே டூ யூ' |
| **கவிதா** | : தாங்க்ஸ்டா செல்லம். |
| **சஞ்சு** | : அம்மா உனக்காக ஒரு சூரியகாந்திப் பூ வரைஞ்சி வச்சிருக்கேன். ஈவ்னிங் சீக்கிரமா வா தரேன் சரியா? |
| **கவிதா** | : சரிடா செல்லம் தாங்க்யூ ஸோமச். |

**பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்கள்:**

| | | |
|---|---|---|
| ஆபிஸ் | – | அலுவலகம் |
| போன் | – | தொலைபேசி |
| போட்டோ | – | நிழற்படம் |
| நம்பர் | – | எண் |
| டென்ஷன் | – | பதற்றம் |
| ஸ்பெஷல் பர்மிஷன் | – | சிறப்பு அனுமதி |
| ஸாரி | – | மன்னிப்பு |
| ஹாப்பி பர்த்டே | – | இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் |
| ஈவ்னிங் | – | மாலை |
| தாங்க்ஸ் | – | நன்றி |
| ஓகே | – | சரி |

## உரை எழுதுவோம்

**உன் பள்ளியில் திரு. அப்துல்கலாம் அவர்களின் நினைவுதினம் கொண்டாடப்படுகிறது. பள்ளிக்கு அருகில் உள்ள கல்லூரியின் மாணவர்கள் திரட்டிய நிதியைக் கொண்டு பள்ளியின் உயர்வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் திருக்குறள் கையடக்கப் புத்தகம் ஒன்றும், நில வரைபடப் புத்தகம் ஒன்றும் பரிசளிக்கிறார்கள். அவர்களுக்குப் பள்ளியின் சார்பாக நன்றி கூற ஒருபக்க அளவில் நன்றியுரை ஒன்றை எழுதுக.**

**விடை :**

வணக்கம்!

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று."

இது அய்யன் வள்ளுவனின் வாக்கு. இதனைப் பின்பற்றியே நன்றி கூற விழைகின்றேன்.

நன்றி என்பது வெறும் வார்த்தைகளை உதிப்பதில் இல்லை. இதயத்தில் இருந்து இதயப்பூர்வமாக சொல்வதாகும். திரு. அப்துல்கலாம் அவர்களின் நினைவு தினமான இன்று, இப்பள்ளியில் பயிலும் உயர்கல்வி வகுப்பு மாணவர்களுக்குத் திருக்குறள் கையடக்கப் பிரதி மற்றும் நில வரைப்படப் புத்தகம் கொடுப்பதற்கு நிதி திரட்டி வழங்கிய கல்லூரி மாணவர்களுக்கு நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



கையோடு கை கோர்த்து
நண்பர்கள் கூடி
இன்பத்தோடு களிப்புற்று
நிதி திரட்டி வழங்கிய
உள்ளங்களை உள்ளன்போடு நன்றி கூறி வாழ்த்துகிறேன்.

## இலக்கிய நயம் பாராட்டுக

### சங்கத் தமிழ் அனைத்தும் தா

இரண்டாயிரமாண்டு நீளமுள்ள கவிதையை ஈன்ற
மூதாயியை தேடியலைந்த களைப்பில் பறவை
ஒருகாலத்தில் தன் தாகம் தணித்த
மண்பானையைத்தேடி அல்லலுற்றது

பாடப்புத்தகத்தில் படம்பார்த்துச் சொன்ன
கதைக்குள்ளிருந்து நீரூற்று எதுவும் பீறிடவில்லை
ஐவகை நிலங்களையும் அலகில் கொத்தி
அடைகாக்க இன்னொரு இடமாற்றுப் போக...
நீலவண்ண கடற்பரப்பில்
அந்தப் பறவை ஒரு முட்டை இட்டது.
அதன் குஞ்சு பொரிப்பில்
ஆயுதமும் புல்லாங்குழல் மறுகையுமாய்
அணங்கொருத்தி உதித்தெழுந்தாள்.

வயல்வெளியெங்கும் சலசலத்துத் திரிந்த
மருதயாழின் ஓசை வழிந்தோட
கால்கள் சுழன்றாடிய விறலிக் கூத்தின்முன்
பிரபஞ்சமே தன்னைப் புனைந்து கொண்டது.

பாணனின் கோப்பை
இப்போது காலியாயிருந்தது
தன் உடலிலிருந்து கிள்ளிப் பறித்த பூவை
குழந்தைக்குத் தந்து வலியில் மூழ்கிய
பச்சைத்தாவரத்தின் கண்களில்
ஒருதுளி ரத்தம் தேங்கியிருந்தது.
----------------------------
சங்கக் கவிதையின் எழுத்தொன்றைத்திறந்து
காக்கைப்பாடினி வெளியேவந்தாள்.
ஆறாம்நிலத்தில் துளிர்த்த அறிவியல்தமிழி நீயென
அருகே வந்தவள் முத்தம் தருகையில்
பறவைகள் தொலைந்துபோன பூமியில்
குளிரூட்டப்பட்ட அறைக்குள் உட்கார்ந்து
கணிப்பொறித் திரையில்
என் சின்னமகள்
ஒரு காக்கையை வரைந்து கொண்டிருந்தாள்

– ஹெச்.ஜி.ரசூல்

**திரண்ட கருத்து :**

இரண்டாயிரமாண்டு பழமை வாய்ந்த கவிதைகளை ஈன்றெடுத்த மூதாயியைத் தேடியலைந்த களைப்பில் பறவை ஒரு காலத்தில் தன் தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காக மண்பானையைத் தேடி அலைந்தது. பாடப்புத்தகத்தில் படம் பார்த்துச் சொன்ன கதைக்குள்ளிருந்து நீரூற்று எதுவும் பீறிட்டு வரவில்லை. தன்னுடைய முட்டையை அடைக்காக்க ஐவகை நிலங்களையும் தன் அலகில் கொத்திப் பார்த்து இடம் கிடைக்காமையால் நீல வண்ணமுள்ள கடற்பரப்பில் அந்தப் பறவை ஒரு முட்டையை இட்டது. அக்குஞ்சு பொரித்ததில் ஆயுதம், புல்லாங்குழல் கொண்ட கையுடன் தெய்வமகள் தோன்றினாள்.

அதனால் வயல்வெளிகள் எங்கும் நீர் நிறைந்து திரிந்தது. பயிர்கள் செழித்து வளர்ந்து மருதநிலமெங்கும் மருதயாழ் வழிந்தோடியது. விறலியர் தங்கள் கால்களைச் சுழற்றியாடிய கூடத்திற்கு முன் இந்த உலகமே தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டது.

இப்போது பாணனின் கோப்பை காலியாக இருந்தது. குழந்தைக்குத் தன் உடலிலிருந்து கிள்ளிப் பறித்தப் பூவைத் தந்து வலியில் மூழ்கிய பச்சைத் தாவரத்தின் கண்களில் ஒரு துளி இரத்தம் தேங்கியிருந்தது.



www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores





சங்கக் கவிதையின் எழுத்தொன்றைத் திறந்து காக்கைப் பாடினி வெளியே வந்தாள். ஆறாம் நிலத்தில் துளிர்ந்த அறிவியல் தமிழி நீயென அருகே வந்தவள் முத்தம் தரும்போது பறவைகள் இல்லாப் பூமியில் குளிரூட்டப்பட்ட அறைக்குள் உட்கார்ந்து கணிப்பொறித் திரையில் சின்னக் குழந்தை ஒரு காக்கையை வரைந்து கொண்டிருந்தாள்.

**மையக் கருத்து** : இயற்கை தோன்றுவதற்கு முன் தோன்றிய நம் தமிழ்த்தாய் ஐவகை நிலங்களைப் பெற்று வளர்ந்தாள். அறிவியல் முன்னேறியபோது இயற்கை, ரத்தக் கண்ணீர் சிந்தியது. தற்போது ஆறாம் நிலத்தில் அறிவியல் தமிழாக வளம் வருகிறான்.

**மோனைத் தொடை** : இரண்டாயிரம் – ஒரு காலம் ; மண்பானை – கதை ; அடை காக்க – அந்த ; அதன் – அணங்கொருத்தி ; வயல் – பிரபஞ்சம்

**எதுகைத் தொடை** : இரண்டாயிரம் – ஒரு காலம்; பாடப்புத்தகம் – அடைகாக்க; மருதயாழ் – பிரபஞ்சம்; ஆறாம் நிலத்தில் பறவைகள் ; அருகே – ஒரு

**அணிநயம்** : பச்சைத் தாவரத்தில் உள்ள பூக்களைப் பறித்தபோது விட்ட சொட்டுத் தண்ணீரை 'ரத்தக் கண்ணீர்' என உருவகப்படுத்தியுள்ளதால் உருவக அணியாயிற்று.

**சந்த நயம்** : இப்பாடல் எதுகை, மோனை அமைந்து இன்னோசையுடன் யாவரும் பாடுவதற்கேற்பச் சந்த நயம் பயின்று வந்துள்ளது.

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



உன்னிடமிருந்து நான் எதிர்பார்ப்பது
உன் அன்பை
கருணையை
மனிதாபிமானத்தை
உயிரிரக்கத்தை
உண்மை வெளிப்பாட்டை
தவிர வேறு எதுவுமில்லை மனிதனிடம்
நான்வேறு நீ வேறு
என்பது பொய்
நானும் நீயும் ஒன்றுதான்
நன்றியுணர்வில்
என்பதை உணர்
அதுபோதும் எனக்கு.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | 3 | 4 |
| 5 | | | | | | | 6 | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | 7 | | | | | | |
| | | | | 8 | | | 9 | | |
| | | 10 | 11 | | | 12 | | 13 | |
| 14 | | 15 | | 16 | | | | | |
| | | | | 17 | | | | | 18 |
| | 19 | | | | | | | | 20 |

**இடமிருந்து வலம்:**

1. மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளைக் கூறும் துறை (9)
7. தேன் – மற்றொரு சொல் (4)
15. புல்லின் இதழ்கள் – நூலாசிரியர் (4)
16. கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் (4)
17. சி.சு. செல்லப்பா நடத்திய இதழ் (4)
19. ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பக்தி இலக்கியம் (6)

**வலமிருந்து இடம் :**

6. யானை – வேறொரு சொல் (5)
9. வந்தவாசிக்கு அருகில் சமணப்பள்ளி இருந்த ஊர்(3)
12. உமறுப்புலவரை ஆதரித்தவர் (5)
20. கவிஞர் மீரா நடத்திய பதிப்பகம் (4)

**மேலிருந்து கீழ் :**

2. புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற சிறுகதை (4)
3. பாரதி நடத்த விரும்பிய கருத்துப்பட இதழ் (6)
4. இளையராஜா உருவாக்கிய இராகம் (5)
5. நற்றிணை 153ஆவது பாடலை இயற்றியவர் (6)
6. அணுவைப்போல சிறுத்து நிற்கும் ஆற்றல் (3)
12. இந்தச் சொல்லின் திரிபே சீறா (3)
13. மகாபாரத்தில் கொடை வீரன் (4)
14. பாரதிதாசன் நடத்திய இதழ் (3)



www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**கீழிருந்து கீழ் :**

7. தவறு – வேறொரு சொல் (2)
8. தருமு சிவராம் என்னும் புனைபெயரிலும் எழுதியவர் (4)
9. மூங்கில் – மற்றொரு சொல் (2)
10. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் (6)
11. ஐங்குறுநூறு பாடும் மலர்களில் ஒன்று (2)
18. மலை என்றும் சொல்லலாம் (2)
19. பத்தாம் திருமுறை (7)

## விடைகள்

**இடமிருந்து வலம்** : 1. பொருண்மொழிக் காஞ்சி, 7.பிரசம், 15. விட், 16. மன்றம், 17. எழுத்து, 19. திருவாசகம்.

**வலமிருந்து இடம்** : 6. அஞ்சனம், 9. வேடல், 12. சீதக்காதி, 20. அன்னம்.

**மேலிருந்து கீழ்** : 2. காஞ்சணை, 3.சித்திராவளி, 4. பஞ்சமுகி, 5. தனிமகனார், 6. அனிமா, 12. சீறத், 13. கர்ணன், 14. குயில்.

**கீழிருந்து மேல்** : 7. பிழை, 8. தராக்கி, 9.வேய், 10. திருவாதவூர், 11. காயா, 18. வரை, 19. திருமந்திரம்.

## நிற்க அதற்குத் தக

மனித இனம் கூடிவாழும் இயல்புடையது. நாம் அன்றாடம் பலருடன் பழகக்கூடிய இன்றைய சூழலில் ஏற்படக்கூடிய சிறிய சிக்கல்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?

| சிக்கல் | தீர்வு |
|---|---|
| பக்கத்து வீட்டுக்காரர் மிகச் சத்தமாகப் பாடல் கேட்டுக் கொண்டிருக்கின்றார். | நாளை எனக்குத் தேர்வு உள்ளது. அதனால் சத்தத்தைக் குறைத்து வைத்துக் கேளுங்கள் என அவர் மனம்புண்படாத படிப் பேசுவேன். |
| நீங்கள் மட்டைப்பந்து போட்டியைப் பார்க்க வேண்டும் என்றும் விரும்பும் நேரத்தில் உங்கள் தங்கை தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். | என் தங்கையிடம் விருப்பத்தைச் சொல்லிக் கேட்டுப் பார்ப்பேன். அவள் மறுத்துவிட்டால் விட்டுக் கொடுத்துவிட்டு என் நண்பர்களுடன் சேர்ந்து வெளியில் விளையாடி விட்டு வருவேன். |
| உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் உங்கள் வகுப்புத் தோழர், உங்கள் மேசை மீது உணவினை இறைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். | உணவின் அருமையை எடுத்துச் சொல்லி புரிய வைப்பேன். உணவு இறைத்தல் கூடாது. அதைச் சுத்தம் செய்யும்படி அறிவுரை கூறுவேன். |
| நீங்கள் அடுத்தநாள் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருக்கும் போது, உங்கள் வகுப்புத் தோழர், பாடத்தில் ஏற்பட்ட ஐயத்திற்காக உங்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கிறார். | அவனுடைய சந்தேகத்தைத் தீர்த்து வைப்பேன். |


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. நாங்கூழ்ப் புழு - Earthworm | 2. விழிப்புணர்வு - Awareness |
| 3. உலகமயமாக்கல் - Globalisation | 4. கடவுச்சீட்டு - Passport |
| 5. முனைவர் பட்டம் - Doctor of Philosophy(Ph.d.) | 6. பொருள்முதல் வாதம் - Materialism |

## கற்பவை கற்றபின்

### தாகூரின் கடிதங்கள்

**1. நேரு, இந்திராவிற்கு எழுதிய கடிதம் ஒன்றை வகுப்பறையில் படித்து அது குறித்துக் கலந்துரையாடுக.**

**ஜெயஸ்ரீ** : வணக்கம் ஓவியா, எப்படி இருக்கிறாய்?

**ஓவியா** : வணக்கம், நலமாக இருக்கிறேன்.

**ஜெயஸ்ரீ** : நேரு மாமா குழந்தைகள் மீது அதிக பாசம் காட்டுவார்.

**ஓவியா** : ஆமாம், அவர் தன்னுடைய மகள் இந்திரா மீது அதிக பாசம் கொண்டவர்.

**ஜெயஸ்ரீ** : நேருவின் மகள் இந்திரா படிப்பதற்கு அயல்நாடு சென்றார். அவருக்காக நேரு மாமா பாசமாக கடிதம் எழுதி அனுப்புவார்.

**ஓவியா** : ஆமாம். அவர் தன்னுடைய மகளுக்கு நல்ல புத்தங்களை படிக்கச் சொல்லி கடிதத்தில் எழுதி இருப்பார்.

**ஜெயஸ்ரீ** : உண்மைதான். குறிப்பாக ரவிந்திரநாத் தாகூர் எழுதிய கீதாஞ்சலி நூலை குறிப்பிட்டுள்ளார்.

**ஓவியா** : கீதாஞ்சலி நூலில் ஒரு வரியை மேற்கோள் காட்டியுள்ளார். “மனமானது எங்கு பயமின்றி இருக்கிறதோ...” என்று.

**ஜெயஸ்ரீ** : எங்கிருந்தாலும் மனதில் பயம் இருக்கக்கூடாது என்பதே அவருடைய கருத்து.

**ஓவியா** : ஆமாம், பெண்கள் குடும்பம் மீது பாசமாகவும், சாதிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்றார்.

**ஜெயஸ்ரீ** : அதுமட்டுமல்ல, கடந்த காலத்தையும் கருணையோடும் புரிதலோடும் நோக்க வேண்டும், வரலாறுகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

**ஓவியா** : வாழ்க்கைக்கு கருணையும், புரிதலும், வரலாறும் முக்கியம் என்பதே அவருடைய கருத்து.

**ஜெயஸ்ரீ** : அவருடைய கடிதம் பாசத்தையும் பெண்ணின் பெருமையும் சமூக வாழ்வியலையும் எடுத்துக் கூறுகிறது எனலாம்.

**ஓவியா** : நல்ல கருத்துள்ள கடிதம் நன்றி.

**2. உங்களது சுவையான பயண அனுபவம் ஒன்றைக் கடிதமாக எழுதுக.**

செங்கல்பட்டு,
30-4-2018

அன்புள்ள கலை,

நலம் நலம் அறிய அவா, நீயும் உன் பெற்றோர், அண்ணன், அக்காள் அனைவரும் நலமா?

நான் சென்ற வாரம் சுற்றுலா சென்று வந்தேன். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்த அனுபவத்தை உனக்கு எழுதுகிறேன். வியாழக்கிழமை இரவு புதுதில்லிக்குத் தமிழ்நாடு விரைவுப் பேருந்தில் புறப்பட்டோம். சனிக்கிழமை முற்பகல் தில்லியைச் சென்றடைந்தோம். இரயிலில் பயணம் செய்தது மிகவும் பிடித்திருந்தது.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



அங்கு சிற்றுண்டியை உண்டோம். பிறகு குருஷேத்திரம் சென்றோம். அங்கு மகாபாரதப் போர் நடந்த இடத்தைப் பார்த்தோம். அங்கு அப்போர் நடந்தபோது இருந்த மரம் ஒன்று பிரமாண்டமாய் நின்று கொண்டிருந்ததைப் பார்த்து வியப்பாக இருந்தது. அங்கிருந்து பீஷ்மர் அம்புப்படுக்கையில் படுத்திருந்த இடத்தைப் பார்த்தேன். அங்குப் பாண்டவர், கௌவரர்கள் சிலைகள், போர்க்கள நிகழ்ச்சியை விளக்கும் சிலைகள் எனச் சிலைகள் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தன. அவை மகாபாரதப் போரை நம் கண்முன் கொண்டு வந்து விட்டன. இரண்டு நாட்கள் அங்குள்ள கோவில்களைப் பார்த்தோம்.

பிறகு அங்கிருந்துப் புறப்பட்டுப் பஞ்சாப் சென்றோம். அங்கு அமிர்தசரசில் உள்ள சீக்கியர்களின் மதக்கோவிலான பொற்கோவிலுக்குச் சென்றோம். பொற்கோவில் பார்ப்பதற்கே மிகவும் அழகாக இருந்தது. கோவிலுக்குள் சென்ற போது என்னையே மறந்தேன். ஏதோ ஒரு புது உலகில் உள்ளது போன்ற ஒரு உணர்வு தோன்றியது.

பொற்கோயில் அருகே அமைந்துள்ள ஜாலியன்வாலா பாக் என்ற இடத்திற்குச் சென்றோம். இந்த இடம் 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13ஆம் நாள் அன்று ஆங்கிலேயே இராணுவத்தினர் இந்திய விடுதலை இயக்கத்தினரைச் சுட்டுக் கொன்ற இடமாகும். குறுகிய நுழைவு வாயில், பெரிய கிணறு, மிக உயர்ந்த சுற்றுச்சுவர் இவற்றைப் பார்த்தபோது என் மனம் நெகிழ்ந்தது. பிறகு அங்கிருந்த வாகா என்று சொல்லக்கூடிய இந்தியப் பாகிஸ்தான் எல்லைச்சாவடிக்குச் சென்றோம். இரு நாட்டினர் அணி வகுப்பு கொடி இறக்கும் நிகழ்வு ஆகியவற்றைப் பார்த்தேன். அங்கு மட்டும் இருநாட்டினரும் கை கொடுத்துக் கொள்கின்றனர். மற்றபடி இரு நாட்டின் பகை ஓயவில்லை. அதன்பிறகு அங்கிருந்துப் புது தில்லிக்கு வந்து புதுதில்லியிருந்து தமிழ்நாடு விரைவுப் பேருந்தில் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். இந்த ஒரு வார நிகழ்வு என் வாழ்வில் நீங்கா இடம் பெற்றிருக்கும். உனக்கும் வாய்ப்புக் கிடைத்தால் சென்று வா. அனைவரையும் விசாரித்தாகச் சொல். கடிதம் எழுது.

இப்படிக்கு,
உன் அன்புள்ள
கவின்.

உறைமேல் முகவரி

| | |
|---|---|
| பெறுநர்<br>ச. கலை,<br>எண் 10, மேலமாடவீதி,<br>மதுரை. | அஞ்சல் தலை |

## ஒவ்வொரு புல்லையும்

**1. இயற்கையும் மனிதனும் என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக.**

இயற்கைத் தோன்றுவதற்கு முன் மனிதன் தோன்றினான். இயற்கையைக் கண்டு வியந்தான். இயற்கைக்குச் சக்தியுள்ளதாய் எண்ணினான். இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான். இயற்கையாக உள்ள ஐம்பூதங்களை வணங்கினான். அவனிடம் பணமில்லை; அவனுக்கென்று வீடு இல்லை. அதனால் அவனிடம் பயமுமில்லை. சரியாக உழைத்தான். வெற்றியும் பெற்றான்.

நாளாக நாளாக உடன் இருந்த விலங்குகளை அவற்றிற்கு வாகனமாக்கினான். ஐம்பூதங்களுக்கும் ஐம்புலன்களுக்கும் உள்ள உறவுகள் – ஆகாயம் – செவிமடுத்தல், காற்று – நுகர்தல், நெருப்பு – பார்வை, நீர் – சுவை, பூமி – தொடுதல் என ஒப்புமைப்படுத்தினான். இவ்வாறெல்லாம் செய்த மனிதன் அவற்றைப் பாதுகாக்க மறந்தான்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



இயற்கையை அழித்தபோது அவனுக்குப் பல இன்னல்கள் வரத் தொடங்கியது. அவன் மட்டுமா துன்பப்பட்டான். பறவையினம், விலங்கினம் என எல்லா உயிரினங்களையும் இன்னல்படுத்தினான். சாலையில் நடக்கும் போது விழுந்து விடுவோமா என எண்ணும்போது விழிப்போடு நடக்கிறான். ஆற்றில் இறங்கும்போது தன் உயிருக்கு ஊறு நேருமோ என எண்ணுகிறான். தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறான். உழவுத் தொழில் செய்யவில்லை என்றால் உணவில்லை என உணர்ந்தான்; உழைத்தான். ஆனால் இயற்கையை அழித்தால் வரும் ஆபத்தை அறியாமல் அவணியை அல்லல்படுத்துகிறான். அவனும் அல்லல்படுகிறான். நிகழ்கால மகிழ்ச்சியை எண்ணி எதிர்காலத் துன்பத்தை வரவேற்கின்றோம்.
வருங்கால வாழ்வு வளம்பெற வையகத்தை பசுமையாக்கி வாழ்வோம்.

## தொலைந்து போனவர்கள்

**1. தமிழ்க் கவிதைகளுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிஞர்களின் பட்டியலைத் திரட்டி நூலின் பெயர், ஆண்டு ஆகியவற்றோடு அட்டவணை உருவாக்குக.**

| வ எண் | ஆண்டு | நூலின் பெயர் | கவிஞர் பெயர் |
|---|---|---|---|
| 1. | 1968 | வெள்ளைப் பறவை (கவிதை) | அ. சீனிவாச ராகவன் |
| 2. | 1999 | ஆலாபனை (கவிதைகள்) | அப்துல்ரகுமான் |
| 3. | 2002 | ஒரு கிராமத்து நதி (கவிதைகள்) | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| 4. | 2004 | வணக்கம் வள்ளுவ (கவிதைகள்) | ஈரோடு தமிழன்பன் |
| 5. | 2006 | ஆகாயத்துக்கு அடுத்த வீடு (கவிதைகள்) | மு. மேத்தா |
| 6. | 2009 | கையொப்பம் (கவிதைகள்) (மொழிபெயர்ப்பு) | புவியரசு |
| 7. | 2017 | காந்தள் நாட்கள் (கவிதைகள்) | இன்குலாப் |

## மனோன்மணீயம்

**1. இப் புல்லின் பரிவும் பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையும் சிறுமையாச் சிந்தனை செயாது" என்னும் பாடல் அடிகளுடன்,**

**"ஆயிரம் மிதிபடல்களிலும்**
**நிமிர்ந்து நிற்கும்**
**புற்களே உன்**
**வழிகாட்டி" - என்ற புதுக்கவிதை வரிகளை ஒப்பிட்டு உங்கள் கருத்துகளை உரைக்க.**

ஒரு புல்லின் பரிவும் பொறுமையும் ஐம்புலன்களால் காண்போர். எப்போதும் சிறுமையானச் சிந்தனைகளை சிந்திக்கமாட்டார்கள். அதுபோலவே ஆயிரம் மிதிப்பட்டும் தன்னம்பிக்கையுடன் எழுந்து நிற்கும் புற்களைப் பாருங்கள் மாணவர்களே! நீயும் புற்களைப் போல எப்படிப்பட்ட இன்னல்கள் வந்தாலும் மின்னோக்கிச் செல்லாமல் முன்னோக்கிச் சென்று வளர்ச்சி(வெற்றி) அடைவதை குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

வெற்றி என்பதே ஒரு மனிதனுக்கு அழகானது வெற்றிபெற பயிற்சியுடன் முயற்சி செய்ய வேண்டும். இன்னல்களுக்கு இடம் தராமல் வெற்றி குறிக்கோளாகக் கொண்டு நடை போட வேண்டும். புற்களாலே பல




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



இன்னல்களையும் கடந்து பொறுமையுடன் நிமிர்ந்து வெற்றிப் பெற்றுவிட்டேன் என்று காட்டுகிறது. எனவே அதுபோலவே நீயும் வெற்றி பெற வேண்டும்.

இப்புல்லின் பரிவும் பொறுமையும் புலனுங் காண்போர் ஒன்றையும் சிறுமையாச் சிந்தனை செயாது என்ற பாடல் அடிகளும் புதுக்கவிதையின் வரிகளும் ஒன்றோடு ஒன்று ஒத்த கருத்தை நமக்கு எடுத்துரைக்கிறது.

**2. நாங்கூழ்ப்புழு நடராசனிடம் பேசியிருந்தால்... - ஒரு பக்க அளவில் உரையாடலை எழுதுக.**

**செந்தாமரை** : வணக்கம் ஐயா.

**நடராசன்** : வணக்கம்.

**செந்தாமரை** : இன்று சுந்தர முனிவர் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்.

**நடராசன்** : வணங்குவேன்.

**செந்தாமரை** : நீங்கள் மனிதப் பிறவியாக பிறந்து இருந்தால் யாராக பிறக்க ஆசைப்படுகிறீர்கள்.

**நடராசன்** : சுந்தர முனிவர்

**செந்தாமரை** : மக்கள் மனநிலை எப்படிப்பட்டது?

**நடராசன்** : குரங்கு போன்றது, நிரந்தரமானது இல்லை.

**செந்தாமரை** : உழவர்களுக்கு நீ யார்?

**நடராசன்** : நண்பன்.

**செந்தாமரை** : உன்னுடைய தொழில் என்ன?

**நடராசன்** : மண்ணை பதப்படுத்துவது உழவர்களுக்கு உதவுவது என்னுடைய வேலை.

**செந்தாமரை** : உன்னுடைய உழைப்பு மக்களுக்கு பயன்படுகிறதா?

**நடராசன்** : அதிகமாகவே பயன்படுகிறது.

**செந்தாமரை** : நீங்கள் யாரைக் கண்டு பயப்படுவாய்.

**நடராசன்** : அறிவியலைக் கண்டு.

**செந்தாமரை** : ஏன்?

**நடராசன்** : அறிவியல் விவசாய நிலங்களை அசுத்தப்படுத்துகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படுகின்றது.

**செந்தாமரை** : உண்மைதான். நீங்கள் இவ்வளவு நேரம் எங்களுக்கு பயனுள்ள தகவலை தந்தமைக்கு நன்றி வணக்கம்.

**நடராசன்** : நன்றி, வணக்கம்.

## செவ்வி

**1. பாலினச் சமத்துவம் என்பதன் விளக்கம் அறிக. இது குறித்த நும் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**பாலினச் சமத்துவம் என்பதன் விளக்கம் :**

பாலினச் சமத்துவம் என்பது ஆணும், பெண்ணும் சமமாக கருதுவது ஆகும். ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளில்லை பெண்ணுக்கு ஆண் தாழ்ந்தவரில்லை என்று ஒரே சமமாக நினைப்பதே பாலினச் சமத்துவம் ஆகும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் எல்லாத் துறைகளிலும் ஒரே சமமாக நடத்துவது, பெண்ணுக்கு ஆண்களைப் போல சமஉரிமை கொடுப்பது, வாக்குரிமை, சொத்துரிமை, வேலைவாய்ப்பில் உரிமை, நீ பெரியவர் நான் பெரியவர் பாகுபாடு பார்க்காமல் இருப்பது பாலினச் சமத்துவம் ஆகும்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**தேவி** : வணக்கம் நண்பர்களே! முருகன், சந்தியா, பாபு.

மூவரும் வணக்கம் தேவி.

**முருகன்** : பாலினச் சமத்துவம் நம் நாட்டில் கடைப்பிடிக்கப்படுகிறதா?

**சந்தியா** : நிச்சயமாக, கடைப்பிடிக்கப்படுகிறது.

**பாபு** : எப்படிச் சொல்கிறாய்? சந்தியா?

**சந்தியா** : நம்முடைய அரசு சட்டங்களில் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் இருக்கிறார்கள்.

**பாபு** : அவை ஆயிரத்தில் ஒருவர்தான்.

**சந்தியா** : பெண்களை கல்விக் கற்க வலியுறுத்துகிறது அரசு. உதவித்தொகையுடன் கல்வியும் இலவசமாகத் தரப்படுகிறது.

**முருகன்** : ஆமாம், சந்தியா நீ கூறுவது உண்மைதான்.

**தேவி** : இப்பொழுது அனைத்து நிலைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்களும் இருக்கிறார்கள் அரசும் முன்னுரிமை தருகிறது.

**சந்தியா** : அதேபோல் சொத்துரிமை பெண்களுக்குத் தரப்படுகிறது.

**தேவி** : அனைத்து உரிமைகளும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமாகத் தரப்படுகிறது. நம் நாட்டில் பாலினச் சமத்துவம் கடைப்பிடிக்கப்படுகிறது.

**பாபு** : ஆமாம்.

**சந்தியா** : ஏற்றதாழ்வுகளை களைந்து ஒரே சமத்துவமாக வாழ்வோமாக. நன்றி, வணக்கம்.

## மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்

**1. மெய்ப்புத் திருத்தங்களை அறிவது எத்துறை வேலைவாய்ப்புக்கு உதவும்? - வகுப்பில் கலந்துரையாடுக.**

**பாபு** : வணக்கம், சிவா.

**சிவா** : வணக்கம், பாபு.

**பாபு** : சிவா எப்படி இருக்கிறாய்.

**சிவா** : நான் நலம்.

**பாபு** : சிவா என்ன சொல்கிறாய்.

**சிவா** : பத்திரிக்கை துறையில் இருக்கிறேன்.

**பாபு** : என்ன வேலை செய்கிறாய்?

**சிவா** : நான் பத்திரிக்கையில் பிழை திருத்துபவராக இருக்கிறேன்.

**பாபு** : அப்படியா! எனக்கும் பத்திரிக்கையில் நுழைய வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதற்குதான் என்ன வேண்டும்.

**சிவா** : மெய்ப்புத் திருத்தங்களைக் கற்றுக் கொண்டாலே போதும்.

**பாபு** : அப்படியா! மெய்ப்புத் திருத்தங்களைக் கற்றுக் கொண்டால் என்ன என்ன வேலைக் கிடைக்கும்.

**சிவா** : பத்திரிக்கையில் பிழை திருத்துநர், பிறகு ஆசிரியர் ஆகலாம் மற்றும் தொலைக்காட்சியிலும் வேலை கிடைக்கும்.

**பாபு** : தொலைக்காட்சியில் வேலை அங்கேயும் பிழை திருத்துநர் மற்றும் செய்தி ஆசிரியர் ஆகலாம்.

**சிவா** : அப்படியா! ஓ...

**பாபு** : நானும் இன்று முதல் மெய்ப்புத் திருத்தம் கற்றுக் கொண்டு வேலைக்கு செல்லப் போகிறேன்.

**சிவா** : நன்றி, வணக்கம்.



www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores





## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (1 மதிப்பெண்)

1. **செய்தியை உரியவருக்குத் தெரிவிப்பதற்காக எழுதி அனுப்பப்படுவது.**

அ) கடிதம் ஆ) முகநூல் இ) தகவல் பரிமாற்றம்

[விடை: அ) கடிதம்]

2. **நாட்டுப்புறங்களில்[கிராமங்களில்] சிறந்ததாக விளங்குவது எது?**

அ) நாகரீகம் ஆ) செயற்கை தன்மை இ) இயற்கை [விடை: இ) இயற்கை]

3. **கிழக்கு வங்காளத்தின் பெரிய நதி**

அ) பத்மா ஆ) தாமோதர் இ) கங்கை [விடை: அ) பத்மா]

4. **பட்டணத்து வாழ்க்கையில் மனிதனின் எத்தன்மை வெளிப்படுகிறது?**

அ) மற்ற உயிர்களைத் தன்னுயிர் போல் நினைக்கும் தன்மை

ஆ) மற்ற உயிர்கள் மிகச்சாதரணமாகத் தோன்றாமை

இ) மனிதனின் கொடூரத் தன்மை [விடை: இ) மனிதனின் கொடூரத் தன்மை]

5. **ஜாதீ என்பது ________ வகையில் ஒரு பூ**

அ) மல்லி ஆ)முல்லை இ) அடுக்கு மல்லி

[விடை: ஆ) முல்லை]

6. **சாந்தி நிகேதனத்தில் உள்ள மரத்தின் பெயர்**

அ) பியால ஆ) பத்மா இ) ஜீதி [விடை: அ) பியால]

7. **சீக்கிரம் வாடிவிடும் மலர்கள் மலர்ச்செப்பினுள் வருவதும் போவதும் _______ என்கிறோம்.**

அ) தாமஸிகம் ஆ) பியால இ) ஸேவந்தி [விடை: அ) தாமஸிகம்]

8. **'பௌ-கதா-கவோ' என்பது**

அ) ஒரு ஆறு ஆ) ஒரு புறா இனம் இ) ஒரு மலரின் பெயர்

[விடை: ஆ) ஒரு புறா இனம்]

9. **'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்று அழைக்கப்படுவர் யார்?**

அ) தாகூர் ஆ) காந்தி இ) இன்குலாப் [விடை: அ) தாகூர்]

10. **'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்று அழைக்கப்படுவர்.**

அ) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

ஆ) இரவீந்தரநாத் தாகூர்

இ) இன்குலாப் [விடை: ஆ) இரவீந்தரநாத் தாகூர்]

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



11. **இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஆண்டு**

அ) 1921 ஆ) 1919 இ) 1913 [விடை: இ) 1913]

12. **எந்நூலுக்காக இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றார் தாகூர்?**

அ) கீதாஞ்சலி ஆ) கோரா இ) காரே பைரே [விடை: அ) கீதாஞ்சலி]

13. **தாகூர் "சர்" பட்டத்தைத் துறக்கக் காரணம்?**

அ) வங்கப் பிரிவினை

ஆ) இரண்டாம் உலகப்போர்

இ) ஜாலியன் வாலாபாக் படுகொலை [விடை: இ) ஜாலியன் வாலாபாக் படுகொலை]

14. **சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள நூல்**

அ) கீதா கோவிந்தம் ஆ) தாகூரின் கடிதங்கள் இ) இன்குலாப் கவிதைகள்

[விடை: ஆ) தாகூரின் கடிதங்கள்]

15. **"தாகூரின் கடிதங்கள்" என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர்**

அ) த.நா. குமாரசுவாமி ஆ) இன்குலாப் இ) தாகூர்

[விடை: அ) த.நா. குமாரசுவாமி]

16. **தாகூர் இயற்றிய 'ஜனகணமன' என்னும் பாடல் ________ நாட்டின் நாட்டுப் பண்ணாக உள்ளது.**

அ) வங்காள ஆ) இந்திய இ) பாகிஸ்தான் [விடை: ஆ) இந்திய]

17. **வங்காள தேசத்தின் நாட்டுப் பண்**

அ) ஜனகணமன ஆ) அமர் சோனார் பங்களா இ) ஸ்ரீலங்கா தாயே

[விடை: ஆ) அமர் சோனார் பங்களா]

18. **குருதேவ் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுபவர்**

அ) தாகூர் ஆ) த.நா. குமாரசாமி இ) பெ. சுந்தரம் பிள்ளை

[விடை: அ) தாகூர்]

19. **மனோன்மணியம் நாடகநூலை இயற்றியவர்**

அ) சுந்தரம் பிள்ளை ஆ) சுந்தர முனிவர் இ) நடராசன்

[விடை: அ) சுந்தரம் பிள்ளை]

20. **மனோன்மணியம் நாடகநூலின் ஆக்கத்திற்கு துணைநின்ற ஆங்கிய நூல்**

அ) இரகசிய வழி ஆ) புல்லின் பரிவு இ) சிவகாமி சரிதம்

[விடை: அ) இரகசிய வழி]

21. **நாடகத் தமிழ் நூல்களுள் தலையாய சிறப்பினை உடைய நூல்**

அ) சிலப்பதிகாரம் ஆ) இராமாயணம் இ) மனோன்மணீயம்

[விடை: இ) மனோன்மணீயம்]



www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



22. மனோன்மணீயம் நூலின் கண்கவரும் துணைக்கதை

அ) சிவகாமியின் சரிதம் ஆ) சிவகாமி சரிதம் இ) சிவகாமி செல்வன்

[விடை: ஆ) சிவகாமி சரிதம்]

23. 'இரகசிய வழி' என்ற ஆங்கில நூலை எழுதியவர்

அ) ரிப்பன் பிரபு ஆ) லிட்டன் பிரபு இ) கர்னிங் பிரபு

[விடை: ஆ) லிட்டன் பிரபு]

24. மனோன்மணீயம் எத்தனை அங்கங்களையும் காட்சிகளையும் கொண்டது.

அ) 5, 20 ஆ) 20, 5 இ) 10, 12 [விடை: இ) 10, 12]

25. சுந்தரம் பிள்ளையின் ஞான ஆசிரியர்

அ) ஞானியாரடிகள்

ஆ) கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள்

இ) வையாபுரி பிள்ளை [விடை: ஆ) கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள்]

26. சுந்தரம் பிள்ளை பிறந்த ஊர்

அ) ஆலப்புழை ஆ) மலம்புழா இ) கொட்டக்கதை

[விடை: அ) ஆலப்புழை]

27. ஜீவகன் புதியதாய் கோட்டை நிறுவிய இடம்

அ) புதுக்கோட்டை ஆ) மதுரை இ) திருநெல்வேலி

[விடை: இ) திருநெல்வேலி]

28. ஜீவகனின் மகள்.......................

அ) விசயை ஆ) மனோண்மணி இ) பாஞ்சாலி

[விடை: ஆ) மனோண்மணி]

29. ஜீவகனின் அரசவையில் அமைச்சராக இருந்தவன்

அ) குடிலன் ஆ) சுந்தர முனிவர் இ) நடராசன் [விடை: அ) குடிலன்]

30. சுந்தரம் பிள்ளையைப் போற்றும் விதமாக தமிழக அரசு நிறுவியது.

அ) அறக்கட்டளை ஆ) நூலகம் இ) பல்கலைக்கழகம்

[விடை: இ) பல்கலைக்கழகம்]

31. சுந்தரம் பிள்ளை வாழ்ந்த காலம்

அ) 18 ஆம் நூற்றாண்டு ஆ) 19-ஆம் நூற்றாண்டு இ) 20-ஆம் நூற்றாண்டு

[விடை: ஆ) 19-ஆம் நூற்றாண்டு]

32. சுந்தரம்பிள்ளைக்கு மாகாண அரசு வழங்கிய பட்டம்

அ) அரசவைக் கவிஞர் ஆ) பேராசியர் இ) ராவ் பகதூர் [விடை: இ) ராவ் பகதூர்]

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**33. ‘நீராருங்கடலுடுத்த’- என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இயற்றிய ஆசிரியர்.**

அ) ரவீந்தரநாத் தாகூர் ஆ) சுந்தரம் பிள்ளை இ) இன்குலாப்

[விடை: ஆ) சுந்தரம் பிள்ளை]

**34. இயக்குதற்கு இன்பம் பயக்குமோர் இலக்கு - என்னும் வரி பயின்று வரும் நூல்**

அ) புல்லின் பரிவு ஆ) வில்லிபாரதம் இ) மனோன்மணீயம்

[விடை: இ) மனோன்மணீயம்]

**35. சாலத் தகும் - இலக்கணப் குறிப்பு**

அ) வினைத் தொகை ஆ) உரிச்சொல்தொடர் இ) இடைச்சொல்

[விடை: ஆ) உரிச்சொல்தொடர்]

## கூடுதல் 1 மதிப்பெண் வினா விடைகள்

1. ‘பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்’ என்றழைக்கப்பட்டவர் [விடை: தாகூர்]
2. தாகூர் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஆண்டு [விடை: 1913]
3. ‘குருதேவ்’ என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் [விடை: தாகூர்]
4. வங்காள நாட்டுப்பண் [விடை: அமர் சோனார் பங்களா]
5. வங்க அரசு, தமிழ் – வங்க மொழிகளுக்கு தாகூர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி வழங்கிய விருது [விடை: நேதாஜி இலக்கிய விருது]
6. கிழக்கு வங்காளத்தின் பெரிய நதி [விடை: பத்மா]
7. ‘பியால’ என்னும் மரம் எங்குள்ளது? [விடை: சாந்தி நிகேதன்]
8. ‘காக்கை குருவி எங்கள் ஜாதி’ என்று பாடியவர் [விடை: பாரதியார்]
9. காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நாடக நூல் [விடை: மனோன்மணீயம்]
10. ‘இரகசிய வழி’ என்னும் நூலின் ஆசிரியர் [விடை: லிட்டன் பிரபு]
11. பேராசிரியர் சுந்தரனார் எங்கு பிறந்தார் [விடை: ஆலப்புழை]
12. சுந்தர முனிவர் யார்? [விடை: ஜீவகனின் குலகுரு]
13. கடலுக்குள் மலையைக் கட்டுபவன் [விடை: காலதச்சன்]
14. நர்த்தகி நடராஜின் உயிர்த்தோழி [விடை: சக்தி]
15. வைஜெயந்தி மாலாவின் குரு [விடை: தஞ்சை கிட்டப்பா]
16. ‘திருநங்கையர்’ எல்லாக் காலகட்டத்திலும் இருந்திருக்கின்றனர் என்பதற்கான சான்று எந்நூலில் உள்ளது? [விடை: தொல்காப்பியம்]
17. ‘வேளிர் ஆடல்’ எந்நூலில் உள்ளது? [விடை: சிலப்பதிகாரம்]
18. ‘திருநங்கை’ என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் [விடை: நர்த்தகி நடராஜ்]
19. திருநங்கைகளுள் முதன்முதலில் கடவுச்சீட்டு, தேசிய விருது, மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றவர் [விடை: நர்த்தகி நடராஜ்]



www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**8. 'தேசப்பற்று' பற்றித் தாகூர் கூறுவதென்ன?**

(i) பரீட்சையில் ஒருவன் வெற்றி பெற வேண்டின் சரித்திரப் பாடத்தைப் புறக்கணிக்க முடியாது.

(ii) நம் தேசப்பற்று அப்புத்தக மூட்டையால் உருவானதே அன்றி நாட்டு மக்களிடம் கொண்டுள்ள உண்மையான அன்பினால் அல்ல ஒவ்வொருவரும் 'தான்' என்னும் குறுகிய மனப்பான்மையில் வாழ்ந்து எத்தனையோ பொருள்கள் இடம்பெற வழியில்லாமல் போய்விட்டது எனத் தாகூர் கூறுகிறார்.

**9. தாகூர் சர் பட்டத்தை ஏன் துறந்தார்?**

1919 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலையால் மனம் வருந்திய தாகூர் ஆங்கிலேய அரசைக் கண்டித்து அவர் வழங்கிய 'சர்' பட்டத்தைத் துறந்தார்.

**10. 'விஸ்வபாரதி பல்கலைக் கழகம்' நிறுவக் காரணம் யாது?**

குழந்தைகள் இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்பட வேண்டும். தங்கள் வேலையைத் தாங்களே கவனித்துக் கொண்டு மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1921 இல் விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தை நிறுவினார்.

**11. த.நா.குமாரசுவாமி அறிந்த மொழிகள் யாவை?**

த.நா. குமாரசுவாமி தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, வங்கம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர்.

**12. வங்க அரசு த.நா. குமாரசுவாமியை எவ்வாறு சிறப்பித்தது?**

வங்க அரசு த.நா. குமாரசுவாமியைப் பாராட்டி 'நேதாஜி இலக்கிய விருது' அளித்துச் சிறப்பித்துள்ளது.

**13. சென்னை மாகாண அரசு (சென்னைப் பல்கலைக் கழகம் சுந்தரனாரை எவ்வாறு சிறப்பித்தது?**

சென்னைப் பல்கலைக்கழகம் பேராசிரியர் சுந்தரனாருக்கு 'ராவ்பகதூர்' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

**14. தமிழக அரசு பேராசிரியர் சுந்தரனாரை எவ்வாறு பெருமைப்படுத்தியது?**

பேராசிரியர் சுந்தரனாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசு, இவர் பெயரால் திருச்சியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியுள்ளது.

**15. உயிர்க்குத் தூண்டுகோலாக மனோன்மணியம் கூறுவதை எழுதுக.**

எந்த ஒரு முயற்சியில் ஈடுபடுபவருக்கும் விரைவாக இயக்குதற்கு இன்பம் தரும் ஒரு குறிக்கோள் வேண்டும்; உயிருக்கு அது தூண்டுகோல் போலாகும்.

**16. புல்லின் செயலாக (பணியாக) நடராசன் கூறுவதை எழுதுக.**

கரையில் முளைத்துள்ள இச்சிறு புல்கூட எப்போதும் தன் குறிக்கோளைச் சார்ந்துள்ளது. வாழ்வின் பயனாக சிறிய பூங்கொத்து மலர் ஒன்றை உயர்த்தி இனிய தேன்துளியைத் தாங்கி, ஈக்களை நலமுற அழைத்து, நல்லுணவு தந்து, மகரந்தத் தூள்களை அன்புடன் தூவி சில காய்களை உண்டாக்கியுள்ளது.

**17. வாய்க்கால் காலத்தச்சனுக்கு செய்யும் உதவி யாது?**

வாய்க்கால், காலத்தச்சன் கட்டிடும் மலைக்குத் தேவைப்படும் சிறுசிறு கூழாங்கற்களை நெறுநெறுவென்று உராய்ந்து, நுண்துகளாக்கி, தெள்ளிய பொடியாக்கி, தன் வலிமைக்கு அடங்கிய கல், மண், புல் புழு இன்னதென்றில்லாமல் யாவற்றையும் தன்னுள் ஈர்த்து அகப்படுத்தி உருட்டிக் கொண்டு கடலில் சேர்க்கும்.





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**18. நாங்கூழ்ப்புழுவின் சிறப்பு யாது?**

உழவர்க்கெல்லாம் அரசன் நாங்கூழப்புழு எந்த மண்ணாக இருந்தாலும் நல்ல மண்ணாக மாற்றிவிடும் சிறப்பை உடையது. தான் பிறவி எடுத்த உடம்பை இதற்காகவே பயன்படுத்துகிறது. மண்ணை நன்றாக உழுது உண்டு பின் மெழுகை விட சிறந்த சேறாகப் பதப்படுத்தி உருட்டி வெளிக் கொண்டு வரும். இவ்வளவு உழைத்தும் புகழ் வேண்டாதவர்களைப் போல் ஒரு மண் உருண்டையாக தன் குழிவாயை மூடிவிடும் சிறப்பினை உடையது நாங்கூழ்ப்புழுவாகும்.

**19. தமிழ்நாடக இலக்கண நூல்கள் யாவை?**

அகத்தியம், குணநூல், கூத்தநூல், சந்தம், சயந்தம், செயன்முறை, செயிற்றியம், முறுவல், மதிவாணனார் நாடக இலக்கண நூல், நாடகவியல்.

**20. அச்சுப்படி திருத்துபவர் திருத்தத் குறியீடுகளை அறிந்திருக்க வேண்டியது ஏன்?**

நூல்களையோ, இதழ்களையோ வெளியிடும் போது பிழையின்றி அச்சிடப்பட வேண்டும். எழுத்துப் பிழைகள், தொடர்ப்பிழைகள், மயங்கொலிப் பிழைகள், ஒருமை பன்மை பிழைகள் ஆகியவை நிறைந்த செய்திகள் படிப்பவர்களுக்கு தவறான கருத்தை அளித்து, குழப்பத்தில் ஆழ்த்தி விடும் என்பதால் அச்சுப்படி திருத்துவோர் பிழைகளைத் திருத்தும் முறையினையும் திருத்தக் குறியீடுகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

## சிறுவினா

**1. நாட்டுப்புறங்களின் சிறப்பாக தாகூர் கூறுவன யாவை?**

(i) நாட்டுப்புறங்களில் (கிராமங்களில்) வாழும் மக்கள் இயற்கையோடு ஒன்றி இணைந்து வாழ்வது என் உள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்கிறது.

(ii) நாட்டுப் புறங்களில் இருக்கும்போது எல்லாவற்றையும் விழுங்கவல்ல இயற்கையே சிறந்ததாக விளங்குகிறது.

(iii) இம்மக்களின் பண்பால்தான் நமது சாத்திரங்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவதை, நடக்க முடியாத ஓர் அதிசயம் என்று விட்டுவிடவில்லை எனத் தாகூர் நாட்டுப்புறங்களின் சிறப்பாகக் கூறியுள்ளன.

**2. "பூ"ப் பற்றி தாகூர் கூறுவதென்ன?**

(i) மரத்தின் கிளையில் பூ மலர்கிறது. அதற்குப் புகலிடம் அதுதான். ஆனால் மனிதன் அதற்குப் பெயரிட்டுத் தன் உள்ளத்தினுள் இடம் அளிக்கிறான். நமது நாட்டில் மரங்களில் மலரும் பூக்கள் பல உள்ளன.

(ii) மனிதன் அவை அனைத்தையும் மனிதன் மனத்தினுள் ஏற்றுக் கொள்ளாமல் சிலவற்றை மட்டுமே ஏற்றுக் கொள்கிறான்.

(iii) சில பூக்கள் அதன் மணத்தின் காரணமாக மனித மனத்தைக் கவர்ந்துவிடுகின்றன. இலக்கியங்களில் இடம்பெறும் சிறப்பைப் பெற்றுள்ளன.

**3. இன்குலாப் - ஆசிரியர் குறிப்பு வரைக.**

(i) இன்குலாபின் இயற்பெயர் செ.கா.சீ. சாகுல் அமீது. கீழக்கரை என்னும் ஊரில் பிறந்தார். இசுலாமியச் சமூகத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய தந்தை சித்த மருத்துவர்.

(ii) பள்ளிப்படிப்பைக் கீழக்கரையில் முடித்துவிட்டு சிவகங்கை மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில் புகுமுக வகுப்பில் சேர்ந்து படித்தார். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் இளங்கலை (தமிழ்) பயின்றார்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



(iii) இன்குலாப் – கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு என இலக்கியத்தில் விரிவான தளங்களில் இயங்கியவர். அவருடைய கவிதைகள் 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்ற பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

(iv) இன்குலாப் என்பதற்கு புரட்சி என்று பொருள்படும் 2017 ஆம் ஆண்டில் தமிழுக்கான சாகித்ய அகாதமி விருது இவர் எழுதிய 'காந்தள் நாட்கள்' என்னும் நூலுக்கு அவரின் மறைவிற்குப் பின்னர் வழங்கப்பட்டது.

**4. இன்குலாப் எழுதிய வேறு நூல்கள் யாவை?**

| | |
|---|---|
| கவிதை | : வெள்ளை இருட்டு, சூரியனைச் சுமப்பவர்கள், கூக்குரல், கிழக்கும் பின் தொடரும், பொன்னிக் குருவி, புலிநகரச் சுவடுகள், காந்தள் நாட்கள் முதலியன. |
| சிறுகதை | : பாலையில் ஒரு சுனை. |
| கட்டுரை | : யுகாக் கினி, ஆனால் |
| நாடக நூல்கள் | : ஔவை, மணிமேகலை, குரல்கள் துடி, மீட்சி, |
| பெற்ற விருதுகள் | : சாகித்திய அகாதமி விருது, (மறைவிற்கு பிறகு) சிற்பி இலக்கிய விருது, கவிஞர் வைரமுத்து விருது, கலைமாமணி விருது (திருப்பிக் கொடுத்து விட்டார்) |
| இறப்பு | : 1.12.2016 அன்று இயற்கை எய்தினார். மரணத்திற்குப் பிறகு அவருடைய உடல், அவர் விரும்பியபடி செங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்குக் கொடையளிக்கப்பட்டது. |

**5. மனோன்மணீயம் நூற்குறிப்பு வரைக.**

(i) இந்நாடகம் லிட்டன் பிரபு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய "இரகசிய வழி" என்ற நூலைத் தழுவி அமைந்தது. இந்நூல் வழி நூலாயினும் 'முதல் நூல்' என்று கொள்ளப் பெறும் சீர்மையுடையது.

(i) ஆங்கில நாடக ஆசிரியரான 'ஷேக்ஸ்பியர்' முறையை ஒட்டி ஐந்து அங்கங்களையும் இருபது காட்சிகளையும் கொண்டு விளங்குகிறது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. மக்களிடையே மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வீர உணர்வையும் ஊட்டுவதாகத் திகழ்கிறது இந்நூல். இது தமிழன்னை பெற்ற நல் அணிகலனாகும். நாடகத்துறைக்குத் தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையினைத் தீர்க்க வந்த நூல்.

(iii) மனோன்மணீயம் என்னும் இந்நாடக நூல் காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நூலாக விளங்குகிறது.

(iv) இயற்கையில் ஈடுபாடு கொண்டு, அதனில் தோய்ந்து இணையில்லாத இன்பமும் அமைதியும் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதைக் கூறுவதாக உள்ளது இந்நூல். வடமொழி நாடக நூல்களுக்கு இணையாக நடிப்புச் செம்மையும் இலக்கியத் தன்மையும் ஒருங்கே அமையப் பெற்ற நூல்.

(v) பெரும்பாலும் ஆசிரியப்பாக்களால் அமைந்தது இந்நூல். இன்ப முடிவைக் கொண்ட இன்பவியல் நாடகமாகும். இந்நூலுள் சிவகாமி சரிதம் என்ற கிளைக்கதை இடம் பெற்றுள்ளது. இது நாடகத்துள் நாடகமாகத் திகழ்கிறது.

**6. பெ.சுந்தரம் பிள்ளை - ஆசிரியர் குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| பெயர் | : பெ. சுந்தரம் பிள்ளை |
| பெற்றோர் | : பெருமாள் பிள்ளை, மாடத்தி அம்மாள் |
| ஊர் | : கேரளாவிலுள்ள ஆலப்புழை |
| காலம் | : 1855 முதல் 1897 வரை |

யாரையும் மதித்து வாழ்

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



| | |
|---|---|
| பணி | : இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள் என்பவரைத் தமது ஞானாசிரியராகக் கொண்டு வாழ்ந்து வந்தார். |
| இயற்றிய நூல்கள் | : லிட்டன் பிரபு ஆங்கிலத்தில் எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலைத் தழுவி இவர் 'மனோன்மணீயம்' என்ற நூலை இயற்றினார். நூல்தொகை விளக்கம், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி என்னும் பிற நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். |
| சிறப்பு | : சென்னை மாகாண அரசு இவருக்கு 'இராவ்பகதூர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. தமிழ்நாடு அரசு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் என்னும் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவிப் பெருமைப்படுத்தியது. இவரது 'நீராருடங்கடலுடுத்த' என்ற தமிழ் வாழ்த்துப் பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது. |

**7. அப்துல் ரகுமான் - ஆசிரியர் குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| பெயர் | : அப்துல் ரகுமான் |
| ஊர் | : மதுரை, கிழங்குச் சந்தை பேட்டை |
| காலம் | : 9.11.1937 - 2.06.2017 |
| பெற்றோர் | : மஹி என்னும் சையத் அகமத், ஜைனத் பேகம். |
| சமயம் | : இஸ்லாம். |
| பணி | : வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசியர். |
| சிறப்பு | : புதுக்கவிதை, வசனகவிதை, மரபுக் கவிதை என்று பலவகைகளில் கவிதைகளைப் படைத்தளித்தவர். "மரபுக் கவிதையில் வேர் பார்த்தவர் புதுக் கவிதையில் மலர் பார்த்தவர்" என்று பாராட்டப்படுகிறார். 'கவிக்கோ' என்னும் புகழ் மொழிக்குரியவர். |
| படைப்புகள் | : பால்வீதி, நேயர் விருப்பம், சொந்தச் சிறைகள், கரைகளே நதியாவதில்லை, விலங்குகள் இல்லாத கவிதை, பித்தன், ஆலாபனை முதலியன. |
| பெற்ற விருதுகள் | : பாரதிதாசன் விருது, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழன்னை விருது, ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதமி விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார். |

**8. தமிழ் நாடக இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதுக.**

(i) அகத்தியம்
(ii) குணநூல்
(iii) கூத்த நூல்
(iv) சந்தம்
(v) சயந்தம்
(vi) செயன்முறை
(vii) செயிற்றியம்
(viii) முறுவல்
(ix) மதிவாணனார் நாடக இலக்கண நூல்
(x) நாடகவியல்

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



**9. நர்த்தகி நடராஜ் பெற்ற விருதுகள் எவை?**

(i) தமிழக அரசின் கலைமாமணி விருது

(ii) இந்திய அரசின் சங்கீத நாடக அகாதெமி விருது

(iii) இந்திய அரசுத் தொலைக்காட்சியின் ஏ கிரேடு கலைஞர்

(iv) இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சிறந்த கலைஞர்.

(v) பெரியார் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம்.ள

**10. அச்சுப்படி திருத்துபவர் மேற்கொள்ள வேண்டிய பணிகளைப் பற்றி எழுதுக.**

(i) மூலப்படியில் உள்ளபடியே செய்திகள் அச்சாகி உள்ளதா என ஒவ்வொரு வரியையும் படித்துக் கவனித்தல் வேண்டும்.

(ii) செய்தியின் உள்ளடக்கம், புள்ளி விவரம், எண்கள், அட்டவணைகள் முதலியன விடுபடாமல் கவனித்தல் வேண்டும்.

(iii) செய்தியின் உருவையோ உள்ளடகத்தையோ மாற்றுதல் கூடாது.

(iv) பிழை ஏற்பட்ட சொல்லின் மீது எழுதாமல் இடப்பக்கப் பாதியில் பிழையிருந்தால் இடப்பக்க ஓரமும் வலப்பக்க பாதியில் பிழையிருந்தால் வலப்பக்க ஓரமும் திருத்தம் தருதல் வேண்டும்.

(v) பிழைகளை ஓரம் வரை கோடிருக்கும் போது மேலும் கீழும் உள்ள வரிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(vi) ஒரு வரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டல் வேண்டும்.

(vii) ஒரு சொல்லில் பல பிழைகள் இருந்தால் அச்சொல்லை நீக்கிவிட்டுச் சரியான சொல்லைத் தெளிவாகப் பக்க ஓரத்தில் எழுத வேண்டும்.

(viii) எண்ணின் இடையில் பிழையிருந்தால் அந்தத் தொகையை முழுவதுமாகப் பிழையின்றி எழுதிக் காட்டுதல் நல்லது.

(ix) அச்சுப்படியில் உள்ள வண்ணத்திற்கு (நிறம்) மாறான வண்ணமுடைய மையால் திருத்தல் வேண்டும்.



## இலக்கணக் குறிப்பு

1. தெரியாத, சுவரில்லாத – பெயரெச்சங்கள்
2. கூவும் குயிலும்
   கரையும் காகமும்
   சிலுவையும் பிறையும் – எண்ணும்மை
3. கடிநகர் – உரிச்சொற்றொடர்
4. கடந்து – வினையெச்சம்
5. முடிக்குதும் – தன்மைப் பன்மை வினைமுற்று
6. பின்னிய, முளைத்த – பெயரெச்சம்
7. இளமுகம், சிறுபுல், நல்லூண் – பண்புத்தொகை
8. பூக்குலை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
9. தேன்துளி – உவமைத் தொகை
10. மாமதலை – உரிச்சொல்தொடர்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores





11. ஆசிலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
12. தோட்டியும் – முற்றும்மை
13. ஏகுமின் – ஏவல் பன்மை வினைமுற்று
14. சிக்கி – வினையெச்சம்
15. பேரழகி, முந்நீர் – பண்புத்தொகை
16. பார்த்துப் பார்த்து – அடுக்குத் தொடர்
17. கலந்து – வினையெச்சம்
18. வாய்க்கால் – முன்பின் தொக்க போலி (கால்வாய்)
19. செய்தொழில்
    அலைகடல்
    வீழருவி – வினைத்தொகை
20. மலையலை – உம்மைத் தொகை
21. நெறுநெறு – இரட்டைக்கிளவி
22. மண்கல், புல்புழு, இராப்பகல் – உம்மைத்தொகைகள்
23. காலத்தச்சன் – உருவகம்
24. சாலத் தகும் – உரிச்சொற்றொடர்
25. உருட்டி – வினையெச்சம்
26. குகைமுகம் – உவமைத் தொகை
27. ஏகுவன் – தன்மை ஒருமை வினைமுற்று
28. நில் நில்
    உழுது உழுது
    கோடிகோடியாய் – அடுக்குத்தொடர்கள்
29. ஏகுதி – ஏவல் ஒருமை வினைமுற்று
30. ஓவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
31. நன்மண் – பண்புத்தொகை
32. புழுக்களும் பூச்சிகளும்
    ஒழுக்கமும் பொறையும்
    ஊக்கமும் உறுதியும் – எண்ணும்மை
33. தங்குதல் – தொழிற்பெயர்

## உறுப்பிலக்கணம் காண்க

1. **விழிப்பேன் – விழி + ப் + ப் + ஏன்**

விழி – பகுதி
ப் – சந்தி
ப் – எதிர்கால இடைநிலை
ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample
For Full Book order online and available at all leading Book Stores



## ஒப்புரவு அறிதல்

உலக நடையினை அறிந்து சமுதாயத்திற்கு உதவி செய்து வாழும் முறையின் சிறப்பை அறிதல் ஒப்புரவறிதல் எனப்படும்.

| வ. எண் | குறள் | தெளிவுரை |
|---|---|---|
| 1. | கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என்ஆற்றும் கொல்லோ உலகு. | எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் பெய்யும் மழைக்கு மக்கள் என்ன கைம்மாறு செய்கின்றார்கள். அதுபோலக் கைம்மாறு கருதாது உலக நடையறிந்து செய்யப்படும் உதவிகளும் கைம்மாறு வேண்டுவதில்லை. (உதவி செய்பவர் பயனை எதிர்பார்ப்பதில்லை) |
| 2. | தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தல் பொருட்டு. | ஒருவன் (ஒப்புரவாளன்) பல வகையிலும் முயன்று பாடுபட்டுச் சேர்த்த பெருஞ்செல்வம் எல்லாம் தகுதி உடையவர்க்கு உதவி செய்வதற்கேயாகும். |
| 3. | புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே ஒப்புரவின் நல்ல பிற. | பிறர்க்கு உதவி செய்யும் ஒப்புரவினைப்போல நன்மை தரும் பிற அறச் செயலைத் தேவர் உலகத்திலும் நில உலகத்திலும் பெறுதல் இயலாது. |
| 4. | ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப் படும். | உலகநடையினை அறிந்து பிறருக்கு உதவி செய்து வாழ்பவனே இவ்வுலகில் உயிர்வாழ்பவன் ஆவான். அதனை அறிந்து வாழாதவன் உயிர் உடையவனாயினும் இறந்தவர்களுள் ஒருவனாய் மதிக்கப்படுவான். |
| 5. | ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு. | ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் நல்லவரிடம் உள்ள செல்வம் ஊராரால் நீர் உண்ணப்படும் குளம் போல எல்லோருக்கும் பயன்படும். |
| 6. | பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நயன்உடை யான்கண் படின். | ஒப்புரவு செய்யும் நற்பண்பு உடையவனிடத்தில் செல்வம் சேர்ந்தால், அஃது ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த பழமரம் பழுத்தாற்போல எல்லோருக்கும் பயன்படும். |
| 7. | மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின். | பெருந்தகையாளனிடம் இடத்தில் செல்வம் சேருமானால் அச்செல்வம் தம் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படும் மருந்து மரம்போல, எல்லாருக்கும் எல்லா வகையிலும் பயன்படும். |
| 8. | இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் கடன்அறி காட்சி யவர். | உதவி செய்வதே கடமை என்று அறிந்த அறிவுடையோர்கள் பொருளற்ற ஏழ்மை நிலையிலும் 'உதவி' செய்வதற்கு மனம் தளர மாட்டார்கள். |
| 9. | நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர செய்யாது அமைகலா வாறு. | உதவி செய்யும் நற்குணம் உடையவன் வறுமையடைவன் என்பது, எப்போதும் தவறாமல் செய்யும் உதவியானது தொடர்ந்து செய்ய முடியாமல் வருந்துவதே மிக்க வறுமையாகும். |
| 10. | ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து. | ஒருவனுக்கு ஒப்புரவு (உதவி) செய்வதனால் கேடு வரும் என்றால், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதி உடையதாகும். |





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com